**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 6 ✧ இதழ்-2 ✧ செப்டம்பர் 2023

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org

# ஒரு குடையின் கீழ் திரள்வோம்! உரிமையைப் பெறுவோம்!

வணக்கம் தோழர்களே!

**2023** ஆகஸ்ட் 12 மற்றும் 13 தேதிகளில் நடைபெற்ற செயற்குழு தீர்மானங்களின் மீது கடந்த 31.08.2023 அன்று வாரியத் தலைவரோடு பேச்சுவார்த்தை நடந்துள்ளது.

பெரும்பான்மையான கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் பேச்சுவார்த்தை அமைந்திருந்தது மட்டுமல்ல வாரியத்தரப்பில் செயலகப் பிரிவிலும், தலைமை பொறியாளர் (பணியமைப்பு) அலுவலகத்திலும் அதற்குண்டான பணிகள் நடந்து கொண்டுள்ளன. பேச்சுவார்த்தையில் மிகுந்த ஈடுபாட்டோடு கலந்து கொண்டு கோரிக்கைக்கு தீர்வு கண்டிட வழிவகுத்த வாரியத் தலைவர், வாரிய செயலாளர், துணைத் தலைமை பொறியாளர், செயலகப் பிரிவு மற்றும் தலைமை பொறியாளர் (பணியமைப்பு) அலுவலக அலுவலர்களுக்கு நன்றி தெரிவிப்போம்.

மின்தொழிலிலும், மின்சாரத் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை, சவால்களை களைந்திடதான் மின்சார வாரியத்தில் பணியாற்றும் அனைவருக்குமான கோரிக்கைகளை செயற்குழுவில் நிறைவேற்றினோம். தொழிலின் மீதும், தொழிலாளர்களின் மீதும் எந்நேரமும் கவனமும் கவலையும் கொள்வோரால்தான் செயற்குழு கூட்டவும், தீர்மானங்கள் இயற்றவும் முடியும் என்பதை புரிந்து கொள்ளாத சிலர் புலம்பித் தீர்ப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. வீட்டை ஒட்டையாகாமல் பார்த்துக் கொள்வதை விடுத்து மச்சு வீடு கட்டுகிறானே என்று அங்கலாய்ப்பது அழகுமல்ல, அறிவானதுமல்ல, அனுபவத்திற்குரிய தகுதியுமல்ல, புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொள்ளட்டும்.

ஊதிய உயர்வு நிலுவைத் தொகை பெறுவதில் 2023ம் ஆண்டு என்று ஒப்பந்தத்தில் இருப்பதைப் பார்த்தும் கையொப்பமிட்டுவிட்டு கையெழுத்துப் போடாத சங்கங்களால்தான் நிலுவைத் தொகை கிடைப்பது தாமதமாகிறது என்று தொழிலாளர்கள் மத்தியில் பேசுவது சிலரின் சுகவீனமற்ற நிலை என்று புலப்படுத்துகிறது. இருப்பினும் தொடர்ந்து வலியுறுத்துவதில் முன்னணியில் நிற்கிறோம் என்பதை யாராலும் முகத்திரையிட்டு மறைத்துவிட முடியாது!

தமிழகம் முழுவதும் நடைபெற்ற நமது கிளைகளின் செயற்குழு கூட்டத் தீர்மானங்களை கடந்த இதழும், இம்மாத இதழும் தாங்கிச் சென்று தொழிலாளர்கள் மத்தியில் சேர்ப்பதே உணர்வு பூர்வமான செயல்பாடுகளில் உயிரோட்டமான அமைப்பாக எம்ப்ளாயீஸ் பெடரேஷன் திகழ்கிறது என்பதுதான் மெய்! இது மென்மேலும் இயக்கப் பணிகளில் தொடரும்!

சென்னை முதல் கன்னியாகுமரி வரை நமது பேச்சுவார்த்தை குறிப்புகளடங்கிய பிரசுரங்களும், பிரச்சாரங்களும் தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையை விதைக்கும் செயலாக அமைந்திருக்கிறது. தலைமையின் செயல்பாடுகளை கிளைகள் தன்னார்வத்துடன் எடுத்துச் செல்லும் பாங்கினைக் கண்டு வட்ட கோட்ட உபகோட்ட நிர்வாகிகளையும், பிரிவு பிரதிநிதிகளையும் நெஞ்சார பாராட்டுகின்றோம்.

தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் மத்தியில் நமது செயல்பாடுகளை விவரித்து களத்தில் நிற்போம். அனைவருக்குமான பாதுகாப்பு அரண் நாமென்ற நம்பிக்கையை மகசூலாய்ப் பெறுவோம்!

*''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்''*

என்ற அய்யன் வள்ளுவனின் வாக்கினை மெய்ப்பிக்கும் நாள் விரைவில் வரும்! வெற்றி ஒன்றே நமது இலக்கு என்பது வரலாறாய் மாறும்!! மின்தொழிலில் பணியாற்றும் யாவரும் ஒரு குடையின் கீழ் ஓரணியாய் எம்ப்ளாயீஸ் பெடரேஷனில் இணைந்திடுவோம்!

***- ஆசிரியர்***

# 31.8.2023 அன்று மின்சார வாரியத் தலைவருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை

வணக்கம் தோழர்களே!

நமது செயற்குழு கூட்டம் 12 மற்றும் 13.08.2023 இருநாட்கள் திருச்சியில் நடைபெற்றதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீதான பேச்சுவார்த்தை மின்வாரியத் தலைவர் அவர்களுடன் 31.8.2023 அன்று மாலை 5.00 மணிக்கு நடைபெற்றதில் வாரிய செயலாளர், துணைத் தலைமைப் பொறியாளர் மற்றும் நிர்வாகக் கிளை, செயலகக் கிளை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

மேற்கண்ட பேச்சுவார்த்தையில் நமது தரப்பில் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், மேனாள் செயல்தலைவர் மற்றும் அமைப்பு செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டோம். பேச்சுவார்த்தையில் நமது கோரிக்கைகளுக்கு வாரியத் தரப்பில் அளிக்கப்பட்ட பதில்களின் விபரங்களை இத்துடன் இணைத்துள்ளோம்.

1. **01.12.2019க்கு பின்னர் 16.05.2023 தேதி வரை பணியேற்றுள்ள சுமார் 12,000க்கு மேற்பட்டோருக்கு 6% ஊதிய உயர்வை மேலும் காலந்தாழ்த்தாது வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

   **எதிர்வரும் வாரியக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்று 01.12.2019க்கு பின்னர் 16.05.2023 வரை பணியேற்றவர்களுக்கு 6% ஊதிய உயர்வு வழங்கப்படும்.**

2. **16.05.2023ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி ஊதிய உயர்வு நிலுவைத் தொகை முதல் தவணையை உடனடியாக அளித்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

   **2023 செப்டம்பர் திங்கள் முதல் ஓரிரு வாரத்திற்குள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.**

3. **16.05.2023ல் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தப்படி ஊதிய பொருத்தம் செய்வதில் தவறான விருப்பம் (Option) தெரிவித்தவர்களுக்கு மீண்டும் விருப்பம் தெரிவித்திட வாய்ப்பினை வழங்கி (Revised option) உத்திரவிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

   **ஊதிய உயர்வுக்கான மறுவிருப்பம் தெரிவிப்பது குறித்து வாரிய செயலகப் பிரிவிலிருந்து உரிய உத்திரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

4. **அடிப்படை ஊதியம் பெறும் பகுதி நேரப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தப்படி 6% ஊதிய உயர்வு அளித்திட விரைவாக உத்திரவிட வேணுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

   **வாரியத் தலைவர் ஒப்புதல் பெற்று வாரிய செயலாளர் அலுவலகத்திலிருந்து தலைமை பொறியாளர் பணியமைப்பு அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு உத்தரவு வெளியிடுவதற்கான பணிகள் நடந்து கொண்டுள்ளது. விரைவில் உத்திரவு வெளியாகும்.**

5. **Right Sizing of Man power என்ற புதிய யுக்தியை கையாளாமல் வேலை பகிர்வு குறித்த பேச்சுவார்த்தையை உடனே துவக்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

   **வேலைப்பளு பேச்சுவார்த்தையின்போது Right Sizing of Man power குறித்து நமது நிலைபாட்டை தெரிவிக்க வாரியத் தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.**

6. **அலவன்சஸ் குறித்து பேசுவதற்கு அமைக்கப்பட்டுள்ள கமிட்டி உடனடியாக பேச்சுவார்த்தையை துவக்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது. (CMD. TANGEDCO Proceedings No. 29 Dt. 21.6.2023)**

   **வாரியத் தரப்பில் 2.8.2023ல் அலுவலர்கள் கூடி பேசியுள்ளார்கள். விரைவில் அடுத்த கூட்டம் நடந்த பின்னர் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.**

7. **01.12.2023 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தைக் குழுவை அமைத்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

   **உரிய காலத்திற்கு முன்னதாக கமிட்டி அமைக்கப்படும்.**

8. **கேங்மேன் பணியாளர்களை கள உதவியாளர்களாக (Field Assistant) பதவி மாற்றம் செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

கல்வித் தகுதி உள்ளவர்களுக்கு (ITI, Diploma, Degree (Arts & Engg) முதலில் உள்முகத் தேர்வு மூலம் தகுதிக்கேற்ற பணி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. கேங்மேன் ஊர் மாறுதல் விண்ணப்பங்களின் அடிப்படையில் ஊர் மாறுதல் உத்திரவினை காலந்தாழ்த்தாமல் வழங்கிட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு ஊர் மாறுதல் கோரி வந்துள்ள விண்ணப்பித்துள்ளவர்களுக்கு ஊர் மாறுதல் வழங்கப்படும்.

10. Gangman பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு பொருத்தத்தில் மார்ச் 2023க்கு உரிய புதிய ஊதியத்தை வழங்காமல் உள்ளதை உடனடியாக அளித்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

March 2023 மாதத்திற்குள்ள ஊதியத்துக்கும், புதிய அடிப்படை சம்பளத்திற்குமுள்ள வித்தியாசமுள்ள தொகைக்கு நிதி ஒதுக்கீடு கேட்டு வந்திருக்கும் வட்டங்களுக்கு உடனடியாக பணப்பட்டுவாடா செய்யப்படும்.

11. கேங்மேன் ஊர் மாறுதல் கேட்டுள்ள மின்வட்டங்களில் கேங்மேன் பதவிகள் அனுமதிக்கப்படாமல் உள்ள வட்டங்களில் கேங்மேன் பதவிகளை அனுமதித்து ஊர் மாறுதல் அளித்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

ஊர் மாறுதல் கேட்டுள்ள வட்டங்களில் கேங்மேன் அனுமதிக்கப்படாமல் உள்ளதை சரி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. BP2 நாள் : 12.4.2022 ரத்து செய்வதற்காக தமிழக அரசுக்கு சென்றுள்ள கோப்பினை அனுமதி பெற்று ரத்து செய்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

BP2ல் DA அளிப்பதற்கு ஏற்கனவே கடன் அளிப்பதற்கு விலக்கு பெற்றுள்ளதுபோல அரசுக்கு கோப்பு அனுப்பி விலக்கு பெற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்.

13. ஒவ்வொரு மாதமும் ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வு பெறும் நாளோ அல்லது அடுத்த நாளோ கிடைக்கும் அளவில் ஓய்வுக்காலப் பணப் பயன்களை அளித்திட வேண்டுமென (4 அல்லது 5 நாட்கள் செல்லாமல்) இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

விருப்ப ஓய்வு, மருத்துவரீதியிலான ஓய்வு மற்றும் மாதாந்திர ஓய்வு கால பலன்கள் அளிப்பதில் உள்ள தாமதத்தை இனிவருங்காலங்களில் தவிர்த்திட உடனுக்குடன் வழங்கிட கணக்கு பிரிவுக்கு (Accouts Branch) உரிய உத்தரவுகள் வழங்கப்படும்.

14. பொது வைப்புதி நிதிக்கடன் கேட்டுள்ள விண்ணப்பங்களுக்கு 3லிருந்து 6 மாதங்கள் காலதாமதமாகி பணம் அளிப்பதை தவிர்த்து உடனுக்குடன் வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

GPF Loan April வரை வழங்கியுள்ளோம். விரைவாக ஆகஸ்ட் வரை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15. வீடுகட்டும் கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளவர்களுக்கு (Ready Build, Construction and Enlargement) காலந்தாழ்த்தாது கடன் தொகைகளை அளித்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

செயலகப் பிரிவு கவனம் செலுத்தி உரிய நேரத்தில் வீடு கட்டும் கடன், (Construction & Enlargement) கட்டிய வீட்டிற்கு (Ready Build) வாங்கும் கடன் ஆகியவற்றை விண்ணப்பங்களை நிலுவையில் வைக்காமல் வழங்கப்படும்.

16. ஊர் மாறுதல் உத்தரவு பெற்றவர்களுக்கு பணிவிடுவிப்பு காலதாமதமாவதால் அரசியல் தலையீடு வருவதை நிறுத்தும் வகையில் ஊர் மாறுதல் பெற்றவர்கள் யாவரையும் பணிவிடுப்பு செய்து மாறுதல் கேட்டுள்ள இடங்களில் பணியமர செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

பணி விடுப்பு செய்யப்படாமல் உள்ள பதவிகள் மின்வட்டங்களின் பெயர்கள் குறிப்பிட்டு நம்மிடம் கடிதம் கேட்டுள்ளதுடன் பொதுவான சுற்றறிக்கை வாரியத் தரப்பிலிருந்து ஊர் மாறுதல் உத்தரவு பெற்றவர்கள் பணி விடுவிப்பு செய்திட அறிவுறுத்தி மின்வட்டங்களுக்கு அனுப்பப்படும்.

17. மின்விபத்துகள் தொடர்வதைத் தடுக்க பாதுகாப்பு வகுப்புகள் நடத்திட வேண்டுவதுடன் பணிகளை மேற்கொள்ளும்போது மேற்பார்வையிடுபவர்கள் இல்லாமல் பணிகளைச் செய்யக் கூடாது என்றும் குறிப்பாக கேங்மேன் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் பணி செய்யும்போது விபத்து அதிகம் ஏற்பட்டு உயிரிழப்பும் அதிகமாவதை தடுத்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

பாதுகாப்பு வகுப்புகள் நடத்தியுள்ளது குறித்த விபரங்கள் மின்வட்டங்களிலிருந்து கேட்டுப் பெற்று ஆய்வு செய்து தொடர்ச்சியாக கூட்டம் நடத்தி விபத்துகளை தடுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18. காலிப் பணியிடங்கள் Field Assistant, Assessor, Technical Assistant, Assistant Engineer, Junior Assistant, Typist, Assistant Draughtsmen போன்ற பதவிகளை உடனடியாக நிரப்பிட நேர்முகத் தேர்வு நடத்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

அரசிடமிருந்து அனுமதி பெற்று அனைத்து அடிப்படை பதவிகளும் Assistant Draughtsmen உட்பட நேர்முகத் தேர்வு மூலம் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (Smart Meter fix பண்ணுவதால் Assessor நியமனத்தை தவிர்க்க கூடாது என்று வலியுறுத்தியுள்ளதுடன் Smart Meter பயன்பாடு பலனளிக்காது என்பதையும் குறிப்பிட்டு பேசினோம்.)

19. BP No. 9 நாள் 9.1.2008ஐ ரத்து செய்ததை மீண்டும் கொண்டு வந்து ஒப்பந்த தொழிலாளர்கள் நிரந்தரம் செய்திட ஏதுவாக Time card systemத்தில் பணியமர்த்தி மின்சார வாரியமே நேரடியாக ஊதியம் (PWD Schedule of Rate) வழங்கிட வேண்டுமாய் மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

BP9 ரத்து செய்துள்ள விபரம் குறித்த கோப்புகளை தலைமை பொறியாளர் அலுவலகத்திலிருந்து வாரிய தலைவருக்கு அனுப்பி உரிய ஆலோசனையை பெற்றிட தலைமை பொறியாளர் பணியமைப்பு அலுவலகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

20. பகுதி நேரப் பணியாளர்கள் இல்லாத பிரிவு அலுவலகங்களுக்கு 9.6.2017இல் ஏற்கனவே விவரங்கள் கேட்டு பெற்று வைத்துள்ள சுமார் 1000க்கு மேற்பட்டோரை விரைவாக பணியிலமர்த்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது. (க.எண். 001046/G56/G562/ 2016 நாள்: 9.6.2017)

அரசுக்கு சென்றுள்ள கோப்பின் நிலையறிந்தும், வாரியத் தரப்பில் முடிவெடுத்து பணியமர்த்திட உரிய கோப்புகளை அனுப்பிடவும் தலைமை பொறியாளர் பணியமைப்பு அலுவலகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

21. வருவாய் மேற்பார்வையாளர், இளமின் பொறியாளர் இரண்டாம் நிலை பதவி உயர்வு குறைந்த எண்ணிக்கையில் அளிக்கப்பட்டுள்ளது. உடனடியாக தகுதியுள்ள அனைவருக்கும் காலியிடங்களை நிரப்பும் வகையில் வருவாய் மேற்பார்வையாளர் மற்றும் இளமின் பொறியாளர் இரண்டாம் நிலை (மின்னியல் Diploma and Non Diploma) ஆகிய பதவி உயர்வுகளை உடனடியாக அளித்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

Revenue Superviser Panel மீதமுள்ளவர்களுக்கும், JE IInd Grade (Diploma & Non Diploma) பதவி உயர்வும் இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும்.

22. கடந்த வேலைப்பளு ஒப்பந்த அடிப்படையிலும், ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் வரை கூடுகின்ற மின்இணைப்புகள் அடிப்படையிலும், பதவிகள் அனுமதித்து மற்றும் புதிதாக துவக்கப்பட்டுள்ள துணை மின்நிலையப் பணிகளுக்கு வழங்கப்படாமல் உள்ள பதவிகளை அனுமதித்தும் மின்சார வாரியப் பணி சீராக நடைபெற நடவடிக்கை எடுக்குமாறு இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

புதிய பதவிகள் அனுமதிப்பது குறித்து அரசுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

23. பதவி உயர்வு இல்லாமல் பல்லாண்டுகளாக மின்பாதை ஆய்வாளர்களாக உள்ள சுமார் 500 பேருக்கு (Line Inspector) மேற்பட்டவர்களுக்கு Supernumery Foreman பதவி வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

Namakkal, Nagappattinam, Mettur, Salem, திட்டங்களில் உள்ளதுபோல பிற வட்டங்களில் உள்ள பதவி உயர்வு தேக்க நிலையும் கணக்கெடுத்து பதவி உயர்வில்லாத Line Inspecterகளுக்கு Supernumery Foreman வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

24. மேட்டூர் பணிமனைக்கு தளவாடப் பொருள்கள் வழங்கி உற்பத்தியை பெருக்கி வெளியாரிடம் உபகரணங்கள் கொள்முதல் செய்யாது மின்சார வாரியத்தின் பணிகளுக்கு பயன்படுத்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

மேட்டூர் பணிமனையில் உற்பத்தியை மேற்கொள்ள தேவையான நடவடிக்டகை விரைவாக மேற்கொள்ளப்படும்.

25. மின்விபத்து ஏற்பட்டு சிகிச்சை பெற்ற நீண்ட நாட்களான தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய சிறப்பு விடுப்பு அளிக்க வேண்டுமென (குறிப்பாக விருதுநகர் மின்வட்டம், செங்கமல நாச்சியார்புரம் பிரிவு) இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

மின்விபத்து ஏற்பட்டு சிகிச்சை பெற நீண்ட நாட்கள் அல்லது மாதக்கணக்கில் விடுப்பு எடுத்துள்ள கேங்மேன்களுக்கு சிறப்பு விடுப்பு அனுமதித்தும் விடுப்பு காலத்திற்குண்டான ஊதியம் வழங்கிடவும், உரிய உத்தரவு வழங்கிட தலைமை பொறியாளர் பணியாளர் அலுவலகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (குறிப்பாக உதாரணமாக விருதுநகர் செங்கமல நாச்சியாபுரம் திரு. வே. முருகேசன் 180 நாட்கள் விடுப்பு மற்றும் நாமக்கல் மின்திட்டம் பா. குமரேஷ் Rural West / நாமக்கல் 9000 Recovery (26.4.2022 முதல் 4.6.2022 வரை விபத்தினால் விடுப்பு எடுத்ததற்கு சம்பளம் அளித்துள்ளதில் பிடித்தம் செய்திட தணிக்கை சீட்டு)

26. 2022ம் ஆண்டு ஓய்வு மற்றும் விருப்ப ஓய்வு பெற்றவருக்குண்டான போனஸ் வழங்கப்படாமல் உள்ளதை விரைவாக வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்வது (குறிப்பாக P. வெங்கிடசாமி, சிறப்பு நிலை முகவர் NCES உடுமலைப்பேட்டை)

2022 Bonus நேரத்தில் ஓய்வு மற்றும் விருப்ப ஓய்வு பெற்றவர்களுக்கு Bonus வழங்கப்படாமல் உள்ளதை உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து அளிக்கப்படும்.

27. CPSல் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் Accounts Slip வருடா வருடம் வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

CPS Accounts slip வழங்கப்படாத வட்டங்களுக்கு உரிய உத்திரவு பிறப்பித்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28. பயணப்பட்டியல் 25% குறைத்து வழங்கிட உத்திரவிட்டிருந்ததை அரசாணையை விலக்கி 100% அளித்திட வெளியிடப்பட்டுள்ள அரசாணையை அமல்படுத்தி 100% Travelling Allowance வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது. (G.O. No. 218 Dated : 13 July 2023)

G.O. No. 218 Dated 13.7.2023ஐ மின்வாரியத்திற்கு நீட்டித்து TA Bill 100% வழங்கப்படும்.

29. Technical Assistant, Assistant Engineer (Mechanical and Electrical) Junior Assistant (Adm, Accounts) உள்முகத் தேர்வு நடத்தி தகுதியுள்ளவர்களை பணியிலமர்த்திட 7.6.2022 என்ற Cut off தேதிக்கு விலக்களித்து உள்முக தேர்வு செய்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது. (Per. FB. TANGEDCO Proceedings No. 5 Dt : 7.7.2022)

உள்முகத் தேர்வு 7.6.2022க்கு முன்னர் கல்வித் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டு விபரங்கள் கேட்டு பெற்று உள்முகத் தேர்வு செய்யப்படும்.

30. மதுரை மின்வட்டத்தில் பணியாற்றிய ஒப்பந்த தொழிலாளர் திரு. A. பிரகாஷ் நீதிமன்றத்தில் பெற்றுள்ள தீர்ப்பினை தொடர்ந்து நீதிமன்றம் அளித்துள்ள இழப்பினை பெறாமல் வேலை கேட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பத்தினை பரிசீலித்து வேலை வழங்கிட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

எதிர்வரும் வாரியக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்று திரு. A. பிரகாஷ் அவர்கட்கு பணி வழங்கப்படும்.

31. தொழிலாளர் பற்றாக்குறையினால் மின்சார வாரிய அன்றாட பணிகள் நடைபெறுவதற்கு இடையூறாக உள்ளதால் Name Transfer mela நடத்துவதை தற்காலிகமாக தள்ளி வைத்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

இக்கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும்.

32. தினசரி Disconnection நடைபெறுவதால் மின்சார வாரியத்தில் அன்றாட பணிகள் பாதிக்கப்படும் சூழ்நிலை வருவது மட்டுமல்லாமல் தொழிலாளர்கள் மனஉளைச்சலுக்கு ஆளாகி உள்ளார்கள் எனவே Disconnection செய்வதில் பழைய முறையினை கையாள வேண்டுமென மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

Daily DC & RCயினால் பிற பணிகள் பாதிக்கப்படுவதை தவிர்க்க உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும்.

33. Accounts Test Pass செய்துள்ளவர்களுக்கு ஆண்டு உயர்வு (Increment) வழங்காமல் நிறுத்தி வைத்துள்ளதை மீண்டும் வழங்கிட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

அரசு உத்தரவை பின்பற்றி உத்திரவிட்டுள்ளதால் அரசு உத்தரவை விலக்கிக் கொள்ளும் முன்னர் ஆண்டுயர்வு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

34. இரட்டிப்பு ஊதியம் வழங்குகின்ற நாட்கள் குறித்திட்ட உத்தரவில் ஈரோடு உதவி தணிக்கை அலுவலர் தணிக்கை சீட்டினை ரத்து செய்து Secretariat Branch Letter No. 38092/A9/A92/2022-2 Dt. 8.12.2022 உத்தரவிற்கு மறு உத்தரவிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

இரட்டிப்பு ஊதியம் குறித்து வாரிய உத்தரவுக்கும், வாரிய செயலக பிரிவு உத்தரவுக்கும், தணிக்கை சீட்டுக்கும் உள்ள வேறுபாடுகளை நீக்கிட தகுந்த கோப்பு அனுப்பிட வாரிய செயலகப் பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

35. தரமான மின்கம்பம், தளவாடப் பொருள்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு போதிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

மின்கம்பங்கள் மற்றும் தளவாட பொருட்களின் உறுதித்தன்மையற்ற நிலையில் விபத்துகள் ஏற்பட்டுள்ளது குறித்தும், மின்கம்பங்களின் உறுதிப்பாடு குறித்தும் விபரங்கள் அடங்கிய குறிப்புடன் கடிதம் அளித்திட வாரிய தரப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

36. இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமை முறைப்பணியில் ஈடுபடுபவர்களுக்கு விடுப்பு வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

மின்சார வாரியத்தில் பணியாற்றும் அனைவருக்கும் Second Saturday and Fourth Saturday விடுப்பு அளிக்கும் வகையில் பொதுவான விடுப்பு விதிமுறையை கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

37. TNEB Employees Federation கிளைகள் செயல்பாட்டிற்கு மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்களில் தொழிற்சங்க அலுவலகம் கேட்டு வழங்கப்படாமல் உள்ள மின்வட்ட அலுவலகங்களில் விரைவாக வழங்கிட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

தொழிற்சங்க அலுவலகம் கேட்டு அளிக்கப்படாமல் உள்ள மின்வட்டங்களில் அலுவலகம் அளித்திட ஆவன செய்யப்படும்.

38. உறுப்பினர் சந்தா, நன்கொடை போன்றவைகள் தொழிலாளர்கள் விருப்பம் தரும் விண்ணப்பங்களின் அடிப்படையில் பிடிக்காமல் சங்க கடித தாளில் எழுதி தருவதை ஏற்று பிடித்தம் செய்வதை தவிர்த்திட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

ஊதியத்தில் சந்தா / நன்கொடை பிடித்தம் செய்வதில் தொழிலாளர் விருப்பின்றியோ அல்லது பொதுவாக எழுதிக் கொடுப்பதையே ஏற்க கூடாதென சம்பளம் வழங்கும் அதிகாரிகளுக்கு பொதுவான உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

39. திரு. P. வேதமணி கணக்கு மேற்பார்வையாளர் கன்னியாகுமரி மின்வட்டம் பணி ஓய்வு அன்று தற்காலிக பணி நீக்கம் செய்து ஒரு வருட காலமாகியும், திரு. P. வேதமணி குற்றச்சாட்டில் சம்மந்தப்பட்டுள்ள பலரும் ஓய்வு பெற்று சென்றுள்ளதால் குற்றச்சாட்டுக்கு சம்மந்தமில்லாத திரு. P. வேதமணி அவர்களை குற்றச்சாட்டு நடவடிக்கையிலிருந்து விடுவித்து முறையாக ஓய்வு பெற வைத்து ஓய்வு கால பணபயன்களையும், ஓய்வூதியத்தையும் வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

திரு. P. வேதமணி கணக்கு மேற்பார்வையாளர் கன்னியாகுமரி தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்து ஓய்வு பெற வைப்பதற்கான கோப்பை வாரியத் தலைவருக்கு அனுப்பி வைத்திட வாரிய செயலகப் பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

40. TNEB Employees Federationல் இணைப்பு வைத்துள்ள TNEBREOS (தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கம்) சங்கத்தின் பெயரை ஓய்வூதியர்களுக்கான உத்தரவுகள் வழங்குவதில் பெயர் குறிப்பிட வேண்டியும் ஓய்வூதியர்கள் குறித்த கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை வாரியம் நடத்திடும்போது மேற்கண்ட சங்கத்தையும் அழைத்திட வேண்டியும் கொடுத்துள்ள கடிதத்தின் மேல் வாரிய செயலகப் பிரிவில் நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளதை உடனடியாக கவனம் செலுத்தி பெயரை குறிப்பிடவும், பேச்சுவார்த்தைக்கு அழைத்திடவும் வேண்டுமென மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

TNEBREOS தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கத்தின் பெயரை ஓய்வூதியர்களுக்கான உத்திரவில் குறிப்பிடுவதற்கும், ஓய்வூதியர்களுக்கான குறை தீர்க்கும் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்கும் செயலகப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

41. காலியாகவுள்ள பணியிடங்களுக்கு Redeployment, Outsourcing போன்ற வகைகளில் பணியமர்த்திட வேண்டாமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

Redeployment, Out sourcing குறித்து கொள்கை ரீதியான வாரிய முடிவுகளை நடைமுறைப்படுத்திடுமுன் தொழிற்சங்கங்களோடு பேசிட வேண்டுமென வலியுறுத்தியுள்ளோம்.

42. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தலைமைப் பொறியாளர் அலுவலர்களுக்கு முதுநிலை நிர்வாக அலுவலர் (Senior Administrative Officer) பதவி வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

Senior Administrate Officer பதவி அனுமதி வழங்குவது குறித்து விரைவில் பரிசீலிக்கப்படும்.

43. Superintendent, Section Officer ஆகியோருக்கு வழங்கக் கூடிய ஊதியத்தை Administrative Supervisor, Accounts Supervisor ஆகியோருக்கு வழங்கிட வேண்டுமாய் மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

வழக்கு இருப்பதால் பரிசீலிக்க முடியாது என்பதை வழக்கு Section Officer, Superindent, ஊதியத்தை Adm Supervisorக்கு வழங்கிட வேண்டிதான் வழக்கு போடப்பட்டுள்ளது, வழக்கை முடிவுக்கு கொண்டு வர நமது தரப்பு கோரிக்கையை நிர்வாகம் ஏற்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளோம்.

44. Chief Head Draughtsmen பதவிகள் அனுமதிக்கப்படாமல் உள்ள மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்களுக்கு CHD பதவி அனுமதித்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

Chief Head Draughtsmen பதவி அனுமதித்திட பரிசீலிக்கப்படும்.

45. செவிலியர்களுக்கும், Senior Draughtsmen, Head Draughtsmenகளுக்கும் தமிழக அரசில் வழங்கப்பட ஊதியத்தில் வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

செவிலியர் மற்றும் SD, HDக்கான ஊதிய முரண்பாட்டை களைந்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

46. நாகப்பட்டினம் மின்வட்டம் சீர்காழி மற்றும் கொள்ளிடம் பகுதிகளில் ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாக சேதமடைந்த மின்கட்டமைப்பை 1.6.2023 முதல் 30.6.2023 வரை சரி செய்யப்பட்டதற்கு அறிவிக்கப்பட்ட இரட்டிப்பு சம்பளம் ரூ. 14,16,186/- வழங்கப்படாமல் உள்ளதை விரைவாக வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது. (5.7.2023ல் Fund Allotment நாகப்பட்டினம் மின்வட்டத்திலிருந்து கேட்கப்பட்டுள்ளது)

நாகப்பட்டினம் மின்வட்டத்திற்கு இரட்டிப்பு ஊதியம் ரூ. 14,16,186/ உடன் வழங்கிட உறுதி அளிக்கப்பட்டது.

47. பணியிலிருக்கும்போது மரணமடையும் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் குடும்ப நல பாதுகாப்பு நிதி ரூ. 3,00,000/-த்திலிருந்து ரூ. 5,00,000/-மாக உயர்த்தியுள்ள அரசாணை எண். 197 நாள்: 1.9.2021ஐ மின்சார வாரியத்திற்கு நீட்டித்து உத்தரவிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட அரசாணையை மின்சார வாரியத்திற்கு நீட்டித்து விரைவில் உத்தரவு வழங்கப்படும்.

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

# தேனி மின்திட்டக் கிளை

8.7.2023 அன்று தேனி மின்வட்ட பெடரேஷன் அலுவலகத்தில் தலைவர் M. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. அலுவலக உதவியாளரிலிருந்து பதிவு எழுத்தர் பதவி உயர்வு வழங்கிய மேற்பார்வை பொறியாளர் / தேனி அவர்களை இச்செயற்குழு பாராட்டுகின்றது.
2. மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் / தேனி மற்றும் கோட்ட அலுவலகத்தில் கோப்புகளை பாதுகாத்திட ஓர் பாதுகாப்பு அறையினை உருவாக்கிடவும், கோப்புகளை பதிவு எழுத்தர் மூலமாக பராமரிப்பு செய்திட மேற்பார்வை பொறியாளர் / தேனி அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
3. கம்பியாளர், கள உதவியாளர் மற்றும் கேங்மேன் பணியாளர்களுக்கு வட்டத்திற்குள்ளேயே விருப்ப மாறுதல் உத்திரவு வழங்கப்பட்டு சுமார் ஓர் ஆண்டு காலம் கடந்தும் பணிவிடுப்பு செய்யாத நிலையில் உள்ளதனை மேற்பார்வை பொறியாளர் / தேனி அவர்கள், உரிய செயற்பொறியாளர்/ பகிர்/ தேனி, சின்னமனூர் மற்றும் பெரியகுளம் ஆகியோர்களுக்கு தக்க அறிவுரை வழங்கி பணியாளர்களை பணிவிடுப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
4. கம்பியாளரிலிருந்து உபரி மின்பாதை ஆய்வாளராக பணியேற்பு செய்த நாளினை பதவி உயர்வாக கருதிட வேண்டுமென தலைமைப் பொறியாளர்/ பணி/ சென்னை அவர்களின் கு.எண். 034374/ 414/ஜீ46/ஜீ462/ 2016-20 நாள்: 27.06.2018-ன் வழிகாட்டுதலின் படியும் மற்றும் தலைமைப் பொறியாளர் / பணி/ சென்னை அவர்களின் கு.எண். 034374/ 414/ ஜீ46/ ஜீ462/2016-20 நாள்: 05.02.2018-ன் வழிகாட்டுதலின்படியும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள மின்பாதை ஆய்வாளர் முதன்மைப்பட்டியலினை மாற்றி வழங்கிட மேற்பார்வை பொறியாளர் / தேனி அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
5. மத்திய அலுவலகத்தில் எங்களது தொழிற்சங்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மின் இணைப்பு மற்றும் தண்ணீர் பைப் லைன் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
6. திரு. R. நிஷாந்த்குமார் கேங்மேன் (பயிற்சி) காமயகவுண்டன்பட்டி என்பார் மீது, வாரிய நிலையாணைகளுக்கும், பாதுகாப்பு விதிக்கும் மாறாக எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையினை ரத்து செய்திடவும், அன்னாரின் பயிற்சி காலத்தினை வரைமுறை செய்யவும் செயற்பொறியாளர் / பகிர் / சின்னமனூர் அவர்களுக்கு உரிய அறிவுரை வழங்கிட மேற்பார்வை பொறியாளர் / தேனி அவர்களை இச்செயற்குழு கேட்டுக கொள்கின்றது.
7. திரு. P. சின்னச்சாமி, வணிக உதவியாளர் / மதுராபுரி என்பாருக்கு சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P. No. 11414 of 2001 நாள்: 11.03.2019 வழங்கப்பட்ட தீர்ப்பில், பணி நீக்க காலத்தினை பணிக்காலமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென உத்திரவு வழங்கப்பட்டுள்ளதால் அன்னாருக்கு இளையவர்கள் முகவர்களாக பணியாற்றுவதால், மேற்கண்ட நபருக்கு வணிக ஆய்வாளர் அதனை தொடர்ந்து முகவர் முதல் நிலை பதவி உயர்வு வழங்கிட மேற்பார்வை பொறியாளர் / தேனி அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.
8. மின்மாற்றிகள் பழுதடைந்ததனை வெளிகம்பெனியில் சரிவதனை செய்வதனை தவிர்த்து வாரியமே பழுதினை சரி செய்து பொது மக்களின் பெயரினை பெற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மேற்பார்வை பொறியாளர் / தேனி அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.
9. 01.12.2019 முதல் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு 6% ஊதிய உயர்வும், 10 ஆண்டு காலம் பணியாற்றிய அனைத்து பணியாளர்களக்கு 3% சர்வீஸ் வெய்ட்டேஜினை மின்வாரியத்திலிருந்து பெற்றுக் கொடுத்த மாநில தலைமைக்கு இச்செயற்குழு பாராட்டினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.
10. 01.12.2015 முதல் 22.02.2018-க்கு இடைப்பட்ட காலத்தில் பணியேற்பு செய்தவர்களுக்கு வழங்கிய ஊதிய உயர்வினை பிடித்தம் செய்ய 30.05.2023 வழங்கப்பட்ட உத்திரவினை மறு உத்திரவு வரும் வரை நிறுத்தம் செய்ய உத்திரவு பெற்றுத் தந்த மாநில தலைமையினை இச்செயற்குழு பாராட்டுகின்றது.

11. மின்வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பாமலும், வேலை மனு ஒப்பந்தம் தொழிற்சங்கங்களிடம் பேசாமலும் தன்னிச்சையாக (Out sourcing) அவுட்சோர்சிங் முறையினை அமுல்படுத்தும் அயல்பணியில் பணியாற்றி வரும் மின்வாரியச் செயலர் அவர்களை மின்சார வாரியத்திலிருந்து மாறுதல் செய்திட மாநில தலைமை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.

12. 01.12.2019 முதல் 16.05.2023-க்கு இடைப்பட்ட காலத்தில் பணியேற்பு செய்த வாரிசு வேலை பணியாளர்கள் மற்றும் கேங்மேன் பணியாளர்களுக்கு மின்வாரிய தலைவர் 09.06.2023 அன்று பேச்சுவார்த்தை நடத்தியதனை ஏற்றுக் கொண்டபடி, பணியாளர்களுக்கு ஊதிய உயர்வினை பெற்றுத் தர மாநில தலைமையினை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

13. 09.06.2023 அன்று நமது தொழிற்சங்கத்திடம் மின்வாரிய தலைவர் நேரடி பேச்சுவார்த்தையின் மூலமாக தீர்வு காணப்பட்ட கீழ்கண்ட கோரிக்கைகளான,
    i. கேங்மேன் பணியாளர்களின் விருப்ப மாறுதல் உத்திரவு.
    ii. விடுபட்ட 5000 கேங்மேன்களை பணியில் அமர்த்துவது.
    iii. K2 அக்ரிமெண்ட் முறையினை கைவிட்டு, பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு PWD Schedule of rate-ல் ஊதியம் அளித்து பணியில் அமர்த்துவது.
    iv. சுமார் 1000 பகுதி நேரப் பணியாளர்களுக்கு பணி நியமனம் பெற்றுத் தருவது.
    v. கேங்மேன் பணியாளர்களை கள உதவியாளராக பதவி மாறுதல் செய்வது.

14. BP2 நாள்: ................. மின்வாரியம் வழங்கப்பட்ட உத்திரவினை ரத்து செய்திட மாநில தலைமை நடவடிக்கை எடுத்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

15. திரு. R. நிஷாந்த்குமார் கேங்மேன் (பயிற்சி) காமயகவுண்டன்பட்டி அன்னாரின் பயிற்சி காலத்தினை வரைமுறை செய்ய தலைமைப் பொறியாளர் / பணி/ சென்னை அவர்களிடமிருந்து உரிய உத்திரவினை பெற்றுத் தர மாநில தலைமையினை இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.

16. நிர்வாக இளநிலை உதவியாளரிலிருந்து நிர்வாக உதவியாளர், நிர்வாக உதவியாளரிலிருந்து நிர்வாக மேற்பார்வையாளர், நிர்வாக மேற்பார்வையாளரிலிருந்து உதவி நிர்வாக அலுவலர் இதே போல் கணக்கு இளநிலை உதவியாளரிலிருந்து கணக்கு உதவியாளர், கணக்கு உதவியாளரிலிருந்து கணக்கு மேற்பார்வையாளர், கணக்கு மேற்பார்வையாளரிலிருந்து உதவி கணக்கு அலுவலர் மற்றும் கணக்கீட்டு ஆய்வாளரிலிருந்து வருவாய் மேற்பார்வையாளர் போன்ற பதவிகளுக்கு தகுதிக்காண் பட்டியல் கேட்கப்பட்டு (Suitablity Report) சுமார் ஒரு வருட காலம் கடந்தும் பதவி உயர்வு வழங்காத நிலையிலுள்ளதனை மாநில தலைமை தலையிட்டு விரைவில் மின்சார வாரியத்திலிருந்து பதவி உயர்வு பெற்றுத் தர வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.

17. வாரிசு வேலை வழங்குவதில் மின்சார வாரியம் காலம் கடத்துவதனை தவிர்த்து வறுமை நிலையிலுள்ள வாரிய பணியாளர்கள் குடும்பத்திற்கு விரைந்து வாரிசு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் மாநில தலைமையினை இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.

18. மின்சார வாரியம் வேலைப்பளு பேச்சுவார்த்தையினை விரைவில் துவகிட மாநில தலைமை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.

19. தேனி வட்டக்கிளையின் பொதுக்குழு, வட்டக்கிளையின் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு மற்றும் மேற்பார்வை பொறியாளர் / தேனி அலுவலக வளாகத்திற்குள் கட்டியுள்ள புதிய தொழிற்சங்க அலுவலக திறப்பு விழா ஆகியவற்றினை மாநில தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் மாநில பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2023 அன்று நடத்திட மாநிலத் தலைமையினை அனுமதியினை இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.

20. மின்சார வாரிய பணியாளர்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு (Fuund Allotment) TANGEDCO மற்றும் TANTRANSCO ஒரே உத்திரவில் நிதி ஒதுக்கீடு பெற்றுத்தர வேண்டுமாய் மாநில தலைமையினை இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.

# திருச்சி / பெருநகர் மின்வட்டம் - தீர்மானங்கள்

திருச்சி பெருநகர் மின்வட்டத்தில் 25.07.2023 அன்று மாலை 05.20 மணிக்கு மின்வாரிய வளாகத்தில் உள்ள சங்கப் பணிமனையில் திட்டத் தலைவர் திரு. H. சத்தியநாராயணர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழுவில் நிறைவேற்ற தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. அனைத்து நிலைகளிலும் உள்ள காலி இடங்களை உடனே நிரப்பிட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
2. தேர்வு செய்யப்பட்ட கேங்மேன் 5000 நபர்களுக்கு பணியில் அமர்த்திட நடவடிக்கை எடுத்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
3. கேங்மேன் பணியாளர்கள் ஊர் மாற்றுதல் உத்தரவை பரிசீலனை செய்து உடனடியாக வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
4. பதவி உயர்வு மற்றும் விருப்ப மாறுதல் உத்தரவு வழங்கியவர்களை பெருநகர் வட்டத்தில் கட்டுப்பாட்டிலுள்ள அனைவரையும் விடுவிக்க வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
5. மின்வாரியத்தில் வெகுநாட்களாக உள்முக தேர்விற்கான அனுமதி வழங்கப்படவில்லை. தொழில்நுட்ப உதவியாளர், இளமின்பொறியாளர் இரண்டாம் நிலை போன்ற பதவிகளுக்கு உள்முக தேர்வு வழங்கிட உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
6. பல ஆண்டுகளாக வணிக ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்கள். வணிக ஆய்வாளர் பதவி உயர்வு வழங்க முடியாத சூழ்நிலையில் SNCI வழங்க நடவடிக்கை எடுத்திட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
7. மின்விபத்துகள் நடைபெறா வண்ணம் உபகோட்டம் அளவில் பாதுகாப்பு வகுப்பு நடத்திட வேண்டுமென மேற்பார்வை பொறியாளரை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
8. நகரியக் கோட்டத்தில் பழுதடைந்த கழிவறைகளை சரிசெய்து ஆண்கள், பெண்கள் பயன்படுத்திட நடவடிக்கை எடுத்திடுமாறு இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
9. ஊதிய உயர்வு நிலுவைத்தொகை ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதிக்குள் வழங்கிடவில்லையெனில் தலைமை அனுமதியுடன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
10. பழுதடைந்த கணினி, பிரிண்டர், மானிட்டர், CPU இரண்டு ஆண்டுகள் சரி செய்யாமல் உள்ளது. போர்கா‘ அடிப்படையில் நடவடிக்கை எடுத்திட வேண்டுமென தலைமையை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
11. தளவாட பொருட்கள், மீட்டர்கள் வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டுமென தலைமையை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
12. பிரிவு அலுவலகங்கள் அனைத்திற்கும் ஒரு ஸ்கேனர் (Scanner) வழங்கிட வேண்டுமென தலைமையை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
13. அவுட் சோர்சிங் முறையை முழுவதுமாக கைவிட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
14. வாரிய பணியில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு பதவி உயர்வில் முன்னுரிமை வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டுமென இச்செயற்குழு தலைமையை கேட்டுக் கொள்கிறது.
15. GM பணியில் சேர்ந்தவர்களுக்கு வாரியத்தில் முறையாக பணி செய்ய பயிற்சி வகுப்புகள் நடத்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

## பல்லடம் மின்வட்டம் - தீர்மானங்கள்

பல்லடம் மின்வட்ட சங்க அலுவலகத்தில் 20.7.2023 அன்று மாலை 5.45 மணிக்கு திட்டத் தலைவர் திரு. G. அங்குராஜ் அவர்கள் தலைமையில் நடந்த செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. பல்லடம் வட்ட கேங்மேன் தொழிலாளர்களுக்கான 3/2023 மாத ஊதிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. பதவி உயர்வுகள் உடனடியாக வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. CPS (Contribution pension Scheme) பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் உள்ளவர்களுக்கு 2022-23 வருடத்துக்கான Account Slip வழங்க வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
4. ஊதிய உயர்வு நன்கொடை தொழிலாளர்களிடத்தில் நேரிடையாக சென்று வசூல் செய்ய நிர்வாகிகளை கேட்டுக் கொள்ளப்படுகிறது.
5. 02.08.2023 அன்று மாநில தலைமை நிர்வாகிகள் 1. தலைவர் 2. பொதுச் செயலாளர் 3. மாநில பொருளாளர் ஆகியோரை அழைத்து காங்கயம் மற்றும் பல்‘டம் கோட்டங்களில் கொடி ஏற்றுதல் விழாவிற்கு தொழிலாளர்களை திரட்டுதல், சிறப்பான முறையில் விழாவினை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

## நாமக்கல் மின்வட்டம் - தீர்மானங்கள்

22.07.2023 அன்று காலை திட்டத் தலைவர் திரு. வெ. பழனிசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. நாமக்கல் மின்பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட பள்ளிபாளையம் கோட்டம் புதிதாக இணைக்கப்பட்ட காரணத்தால் அக்கோட்டத்தில் பணிபுரியும் களப்பணியாளர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து நாமக்கல் மின் பகிர்மான வட்டத்தில் முதன்மை பட்டியலை தவறேதும் இல்லாமல் உடனடியாக வெளியிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
2. நாமக்கல் மின் பகிர்மான வட்டத்தில் களப்பணியாளர்களின் ணிதன்மை பட்டியலை சரிசெய்த பின்பு வாரிய விதிணிறைகளுக்கு உட்பட்டு அனைத்து நிலை பணியாளர்களுக்கும் பதவி உயர்வு உடனடியாக வழங்கிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
3. கேங்க்மேன் பணியாளர்களுக்கு 03/2023 மாத வழங்கிட வேண்டிய ஊதிய நிலுவை தொகையை உடனடியாக வழங்கிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
4. கேங்க்மேன் பணியாளர்களின் வட்டத்திற்குள் ஊர்மாறுதல் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து உடனடியாக உத்தரவு வழங்கிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
5. தொழிற்சங்க கட்டிடம் அல்லது காலி மனையிடம் வழங்கிடவும் வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு கட்டிடம் கட்டி பயன்படுத்திட அனுமதி வழங்கிட வேண்டுகிறோம்.

6. 25 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு வழங்கிட வேண்டிய சான்று மற்றும் ஊக்கத்தொகை வழங்கிட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

7. களப்பணியாளர்களுக்கு கோட்ட அளவில் பாதுகாப்பு வகுப்பு நடத்திட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

8. பாதுகாப்பு உபகரணங்களான இடுப்பு கயிறு, கையுறை, டார்ச் லைட், மழைக்கோட், LT Fuse ஒயர், LT புஸ்சிங் கிளாம்ப் 100KVA/200KVA மற்றும் மின்மாற்றி ஆயில் வழங்கிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

9. களப்பணியாளர்கள் கேங்மேன் உட்பட அனைவருக்கும் இலவச சீருடை வழங்கிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

10. பிரிவு அலுவலகங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள Tree Pruner மாற்றி புதிய Tree Pruner வழங்கிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் குறித்து நேரில் சந்தித்து பேசிட தேதி மற்றும் நேரம் ஒதுக்கி தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## திருவாரூர் மின்வட்டம் - தீர்மானங்கள்

25.07.2023 மாலை 5.30 மணிக்கு மின்வாரிய வளாகத்தில் உள்ள சங்கப் பணிமனையில் திட்டத் தலைவர் திரு. C. இராமதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

### தீர்மானங்கள்

1. விருப்ப மாறுதல் உத்தரவுகள் வாரிய விதிகளை முறையாக பின்பற்றி வழங்கி வரும் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. மேலும் அரசியல் தலையீடுகளுக்கு இடம் அளிக்காமல் விருப்ப மாறுதல்களை பதவி உயர்வு மாறுதல்களில் ஆணைகள் வெளியிட வேண்டும் என இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

2. எதிர்கொள்ள போகும் மழை, புயல் இவற்றில் பாதுகாப்புடன் பணி புரிய தொழிலாளர்களுக்கு Rain Coat, Gloves, Earth Rod, Fuse Wire, Rope உள்ளிட்டவற்றை அனைத்து களப்பணியாளர்களுக்கும், கேங்மேன் உட்பட அனைவருக்கும் கிடைத்திட மேற்பார்வை பொறியாளர்கள் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

3. துணை மின் நிலையங்களில் Land Line அடிக்கடி பழுதாவதால் அவசரத்திற்கு தொடர்பு கொள்ள முடியவில்லை. எனவே, ஒவ்வொரு துணை மின் நிலையங்களுக்கும் ஒரு செல்போன் எண் வழங்கி அதனை செய்தித்தாள் வழியே பொதுமக்களுக்கு தெரியப்படுத்திட வேண்டும்.

4. விடுபட்ட ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் தொடர்பாக தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வரும் மாநில தலைமை மேலும் துரிதப்படுத்திட வேண்டுமாய் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5. கேங்க்மேன் தொழிலாளர்களின் மாவட்டம் விட்டு மாவட்டம் பணி புரிபவர்களுக்கு விருப்ப மாறுதல் உடனே வழங்கிட ஆவன செய்ய வலியுறுத்தி மாநில தலைமையை கேட்டுக் கொள்கிறோம்.

6. திருத்துறைப்பூண்டி பள்ளங்கோவில் துணை மின் நிலைய கட்டடம் பழுதடைந்து மழை நீர் கசிவு ஏற்பட்டுள்ளது இதனையும் திருத்துறைப்பூண்டி 33KV துணை மின் நிலையத்தில் தண்ணீர் வசதி உள்பட அடிப்படை வசதிகளை உடனடியாக செய்து தர மேற்பார்வை பொறியாளர் திருவாரூர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

7. அலுவலக சுத்தம் செய்ய பகுதி நேர பணியாளர்கள் இல்லாமல் பல அலுவலகங்கள் (230KV துணை மின்நிலையம் திருவாரூர், கோவில்வெண்ணி உட்பட) செயல்படுகின்றன.

8. 110 KV துணை மின் நிலையத்தில் Town-I Water Works பெரும்பண்ணையூர் கமலாபுரம் உயர் அழுத்த பாதை Remote Operation செய்ய மழை காலத்திற்குள் சீரமைத்திட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

## தஞ்சாவூர் மின்வட்டம் - தீர்மானங்கள்

24.07.2023 அன்று மாலை 5.20 மணிக்கு தஞ்சை திட்டத் தலைவர் திரு. T. மோகன்தாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. கேங்மேன் பணியாளர்களின் ஊர் மாற்றம் (Circle to circle) விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து பணியிட மாற்று உத்தரவு வழங்கிட இச்செயற்குழு கேட்டு கொள்கிறது.
2. கேங்மேன் பணியாளர்களின் (With in Circle) ஊர் மாற்றம் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து பணியிட மாற்று உத்தரவு வழங்கிட இச்செயற்குழு கேட்டு கொள்கிறது.
3. கேங்மேன் பணியாளர்களை Field Assistant-ஆக பெயர் மாற்றம் செய்ய இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
4. கேங்மேன் பணியாளர்களுக்கு பயிற்சி காலத்தை ரத்து செய்து, பணியேற்பு செய்த நாளிலிருந்து அடிப்படை சம்பளம் வழங்கும்மாறு இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
5. எங்களது அமைப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சங்க மனைக்கு குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை வாரிய செலவினம் மூலம் செய்து தரும்படி இச்செயற்குழு மூலம் கேட்டு கொள்ளப்படுகிறது.
6. களப் பணியாளர்களுக்கு T.A. Bill-ல் கொரோனா காலத்தில் Limit செய்ததை மறு பரிசீலனை செய்து, பயணப்படி வழங்குமாறு இச்செயற்குழு மூலம் கேட்டு கொள்ளப்படுகிறது.
7. களப்பணியாளர்களுக்கு வர கூடிய மழை காலங்களில் பாதுகாப்புடன் பணிபுரிய Rain Coat,Torch light மற்றும் Gloves அனைத்தும் கேங்மேன் பணியாளர்கள் ஒதுக்கீடு (Allotment) செய்யும்படி இச்செயற்குழு மூலம் கேட்டு கொள்ளப்படுகிறது.
8. களப் பணியாளர்களின் பதவி உயர்வு (அனைத்து நிலைகளிலும்) வழங்கிடுமாறு இச்செயற்குழு மூலம் கேட்டு கொள்ளப்படுகிறது.
9. தேர்வு செய்யப்பட்டுள்ள கேங்மேன்களை (5,000) விரைவில் பணியமைத்திட வேண்டும் என இச்செயற்குழு மூலம் கேட்டு கொள்ளப்படுகிறது.
10. இளமின் பொறியாளர் 2ம் நிலையில் பணியேற்பு செய்யும்பொழுது, ஏற்கனவே வழங்கிய ஒரு (Increment) ஆண்டு ஊதிய மாற்றத்தை வழங்கிடுமாறு இச்செயற்குழு மூலம் கேட்டு கொள்ளப்படுகிறது.

# மதுரை மாநகர் மின்வட்டம் - தீர்மானங்கள்

20.07.2023 மாலை 5.00 மணிக்கு மின்வாரிய வளாகத்தில் உள்ள சங்க பணிமனையில் மாநில உபதலைவர் திரு. ச. இராஜாராம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. மதுரை பெருநகர் வட்டத்திற்கு உட்பட்ட கோட்ட அலுவலகங்களில் வருவாய் பிரிவு அலுவலகங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்களில் பெண் பணியாளர்களின் அதிகமான எண்ணிக்கையில் பணிபுரிந்து வருகிறார்கள் மகளிருக்காக தனியாக (Wash Room) கழிவறை வசதி செய்து தர உரிய நடவடிக்கை எடுத்திட மேற்பார்வை பொறியாளர்/பெருநகர், மதுரை அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

2. கருத்துப் பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் (அட்டைப்பட்டியல்) உட்பட புறப்பணிக்கு வாய்மொழியாக உத்தரவாக அனுப்பப்படுகிறார்கள் அவர்களது பாதுகாப்பை முன்னிட்டு உரிய முறையில் உத்தரவு வழங்கிட செயற்பொறியாளர்கள்/மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு அவர்களுக்கு தக்க ஆலோசனை வழங்கிட மேற்பார்வை பொறியாளர்/மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

3. மின் துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகளுக்கு பணம் செலுத்தாமல் இருந்தால் குறிப்பிட்ட கால அவகாசத்தில் மேல் உள்ள இணைப்புகளுக்கு வருவாய் பிரிவு மூலம் TA நோட்டீஸ் அனுப்பும்போது ஒரு நோட்டீஸ் மட்டும் வழங்கப்படுகிறது. வாரிய விதிகளுக்கு உட்பட்ட உரிய முறையில் நடைமுறையில் உள்ளபடி நோட்டீஸ் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் / மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

4. மதுரை பெருநகர் வட்டத்தில் பணிபுரியும் பெண் கள உதவியாளர்களுக்கு கம்பியாளர் பதவி உயர்வு வழங்க கால தாமதபடுத்துவதை தவிர்த்து விரைவில் பதவி உயர்வு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர்/மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5. மத்திய அலுவலகம் கோ.புதூர் மதுரையின் காவலர் பணிக்கு பணியாளர்கள் பற்றாக்குறையை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர்/மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

6. கேங்மேன் பணியாளர்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகி மரணமடைந்து வருவதால் அப்பணியாளர்களுக்கு களப்பணி தொடர்பாக பயிற்சி (Training) அளிக்க நடவடிக்கை எடுத்திட மேற்பார்வை பொறியாளர் / மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

7. கணக்கீட்டு பணியில் உள்ள பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக கணக்கீடு பணியை கணக்கீட்டு ஆய்வாளர்கள் பணி மேற்கொண்டு வருகின்றனர் இவர்களுக்கு நடைமுறையில் உள்ள Pro-Rota வழங்கும் ணிறையை அப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டும் என மேற்பார்வை பொறியாளர் / மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

8. கோட்ட அலுவலகம், வருவாய் பிரிவு அலுவலகம் மற்றும் பிரிவு அலுவலகங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள பழைய கோப்புகளை பண்டக சாலைகளில் (Devolution)

ஒப்படைப்பு செய்திட நடவடிக்கை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் / மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

9. துணை மின் நிலையங்களில் போதிய பணியாளர்கள் இல்லாததால் இரவு பணி மற்றும் அவசரப்பணி மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுவதால் அவசியத்தின் நிலை கண்டறிந்து அங்கு அனுமதி பெற்றுள்ள பணியாளர்களை பணியில் அமர்த்தி முறைப்படுத்திட மேற்பார்வை பொறியாளர் மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

10. களப்பணியாளர்கள் விருப்ப மாறுதல் உத்தரவு காலதாமதம் இன்றி விருப்ப மாறுதல் காலமான ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களுக்குள் உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர்/ மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

11. செக்ஷன் பிரிப்பதில் (Section Bifurication) காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர்/மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

12. மதுரை பெருநகர் வட்டத்தில் ஒருங்கிணைந்த வசூல் பணி கடந்த ஆகஸ்ட் 2022 முதல் நடைமுறையில் இருக்கும்பட்சத்தில் வசூல் பணியில் உள்ள பிற பிரிவுகளில் வசூல் பணியாளர்கள் விடுப்பில் செல்ல நேரிடும் பொழுது எந்த பிரிவில் வசூல் பணி நடைபெறவில்லையோ, அந்த பிரிவு வசூல் பணியாளர்களை புறப்பணிக்கு உரிய உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் / மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

13. கோட்டங்களில் வயது மூப்பின் காரணமாக பணி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு ஓய்வுதியத்தின் பண பயன் பெறும் பட்டியல்களை சரி பார்த்து அனுப்புவதில் கோட்டங்களில் காலதாமதப்படுத்துகிறார்கள் என தகவல் வருகிறது. எனவே காலதாமதமின்றி உரிய நேரத்தில் அனுப்பி வைத்திட கோட்ட செயற் பொறியாளர்களுக்கு உத்தரவு வழங்கிட மேற்பார்வை பொறியாளர்/மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

14. கேங்மேன் பணியாளர்களுக்கு துணை மின் நிலையங்களில் இரவு பணிக்கு செல்பவர்களுக்கு விடுப்பு வழங்க வேண்டுவது மற்றும் அரசு விடுமுறை நாட்களில் பணி செய்தால் இரட்டிப்பு ஊதியம் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர்/மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

15. காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட வாரியத்துடன் பேசி சுமூக தீர்வு காண மாநில தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

16. ஒப்பந்த பணியாளர்கள் நிரந்தரம், பகுதி நேர பணியாளர்கள் இல்லாத பிரிவு அலுவலகங்களில் பணியாளர்கள் நியமித்தல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 5000 கேங்மேன் பணியாளர்கள் நியமனங்கள் குறித்து வாரியத்துடன் பேசி சுமூக தீர்வு காண மாநில தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

17. சிவில் பிரிவில் பணியாற்றும் திருமதி G. சண்ணிகத்தாய் அவர்கள் மேஸ்திரி 3 ஆக உள்ளார். அன்னாருக்கு மேஸ்திரி 2 ஆக பதவி உயர்வு பெற்று தர நடவடிக்கை எடுத்திட மாநில தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

18. மதுரை பெருநகர் வட்டத்திலுள்ள தெற்கு மற்றும் வடக்கு கோட்டத்தில் உள்ள உதவி நிர்வாக அலுவலர்களுக்கு தனி (cabin) அமைத்து தருவது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர்/ மதுரை பெருநகர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

19. அனைத்து பிரிவு அலுவலகங்களுக்கும் வசூல் பணிக்கு Printer மற்றும் Laser Printer வழங்கிடவும் மற்றும் எல்லா பிரிவுகளுக்கும் Wi-fi வசதி செய்திட தர வாரியத்துடன் பேசி தீர்வு காண மாநில தலைமை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

## ஈரோடு மின்வட்டம் - தீர்மானங்கள்

30.07.2023 அன்று காலை திட்டத் தலைவர் திரு. N. அம்மாஜி அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் களப்பணியாளர்களின் பணிதன்மைப் பட்டியலை சரி செய்த பின்பு அனைத்து நிலை பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

2. ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் பணிபுரியும் அனைத்து களப்பணியாளர்களின் பணிதன்மைப் பட்டியலை வழங்கிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

3. கேங்மேன் பணியாளர்களுக்கு மார்ச்/2023 மாதம் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வு நிலுவைத் தொகையை உடன் வழங்கிட ஆவன செய்திடுமாறு இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

4. கேங்மேன் பணியாளர்களின் வட்டத்திற்கு மாறுதல் வேண்டிய விண்ணப்பங்களை பரிசீலனை செய்து உடன் உத்தரவு வழங்கிட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5. அனைத்து களப்பணியாளர்களுக்கும் கோட்ட அளவில் பாதுகாப்பு வகுப்புகள் நடத்திட வேண்டுமாறு இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

6. பாதுகாப்பு உபகரணங்களான இடுப்பு கயிறு, கையுறை, டார்ச்லைட், மற்றும் மழைக்கோட் ஆகியவற்றை அனைத்து களப்பணியாளர்களுக்கும் தரமானதாக வழங்கிட வேண்டுமாறு இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

7. கேங்மேன் உட்பட அனைத்து களப்பணியாளர்களுக்கும் இ‘வச சீருடை வழங்கிட வேண்டுமாறு இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

8. பிரிவு அலுவலகங்களில் பழுதடைந்த Tree Purner மாற்றி புதிய தரமான Tree Purner வழங்கிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

9. ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் மின்பாதைகளில் உள்ள உடைந்த மின்கம்பங்களையும், அறுந்துபோன இழுவை கம்பிகளை புதுப்பித்திட களப்பணி செய்ய கம்பியாளர் மற்றும் களப்பணியாளர் காலிப்பணியிடங்கள் அதிகம் உள்ளதால் வாரியப்பணித்தன்மை அறிந்த ஒப்பந்த பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணிக்கு அமர்த்த மின்வாரியத் தலைமையிடம் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேற்பார்வைப்பொறியாளர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

10. அனைத்து பிரிவு அலுவ‘க வசூல் உபகரணங்களான கணினி, பிரிண்டர், UPS மற்றும் ஏஏஈ போன்றவைகளையும ஆய்வு செய்து புதுப்பிப்பது அல்லது புதிய கருவிகள் பெற்றுத்தர வேண்டுமென மேற்பார்வைப்பொறியாளர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

11. ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் வேறு வட்டங்களுக்கு மாறுதல் உத்தரவு பெற்று பணிவிடுப்புக்காக காத்திருக்கும் களப்பணியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களை உடனடியாக பணிவிடுப்பு செய்து மன உளைச்சலின்றி, விபத்து ஏற்படாமல் நிம்மதியாக பணி செய்ய உதவிடும் வகையில் பணிவிடுப்பு செய்திட செயற்பொறியாளர்களுக்கு தகுந்த உத்தரவுகளை வழங்கிட மேற்பார்வைப்பொறியாளர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

12. ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் GPF Loan & GPF Part-Final மற்றும் வாகனக் கடன் வேண்டி விண்ணப்பித்தவர்கள் தொகை கிடைக்கப் பெறாமல் பாதிக்கப்பட்டுள்ளதால் மின்வாரியத்தின் தலைமைக்கு கொண்டு சென்று மாநில தலைமை உதவிட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

13. பகுதிநேரப் பணியாளர்கள், கேங்மேன் மற்றும் வாரிசு வேலை மூலம் பணியில் சேர்ந்தவர்களுக்கு ஊதிய உயர்வு பெற்றுத்தர தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வரும் மாநில தலைமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் பணப்பயன்கள் விரைந்து பெற்றுத்தர வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

14. ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் பணிபுரியும் கேங்மேன்கள் வேறு வட்டங்களுக்கு மாறுதல் வேண்டி விண்ணப்பித்துள்ளதால் அவர்களுக்கு மாறுதல் உத்தரவு பெற்றுத்தர வேண்டுமென மாநிலத் தலைமையை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

15. கிராமப்புறங்களில் கம்பியாளர்கள் தலா 40 முதல் 50 எண்ணிக்கை வரை மின்மாற்றிகளை பராமரித்து வருகிறார்கள். அதில் சுற்று வட்டாரம் அதிகம். மேலும் மரங்கள் மற்றும் செடி கொடிகள் அதிகம் உள்ளதால் மின்பாதைகளை பராமரிக்கும் பணி அதிகமாக உள்ளது. எனவே கம்பியாளருக்கு ஒரு உதவியாளர் தேவைப்படுவதால் ஒரு கம்பியாளருடன் ஒரு உதவியாளரை பணி ஒதுக்கீடு செய்திட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி மேற்பார்வைப்பொறியாளர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

16. கிராமப்புறங்களில் உள்ள நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு குறைவு காரணமாக தங்களது மின் இணைப்பிற்கான மாதாந்திர மின் கட்டணம் செலுத்த கடைசி நாள் தெரிவதில்லை. இதனால் அதிக மின் இணைப்புகள் துண்டிப்புக்கு வருவதாலும் தினமும் DC பணியை பழைய முறைப்படி 15 நாட்களுக்கு ஒருமுறை என மாற்றம் செய்திட வாரியத்தலைமையை வலியுறுத்த வேண்டுமென மாநிலத் தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

17. ஊதிய உயர்வு நிலுவைத்தொகை வழங்கும் சமயம், பணியாளர்களிடம் நன்கொடை பெற்று நமது ஈரோடு கிளைக்கு வழங்கப்பட்டுள்ள சங்கமனை புதுப்பித்து, விரைவில் திறப்பு விழா மாநிலத் தலைமையை அழைத்து நடத்திட அனைத்து பொறுப்பாளர்களும் முழு உத்வேகத்துடன் பணியாற்றிடலாம் என இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

18. அனைத்து களப்பணியாளர்களும் தவறாமல் பாதுகாப்பு உபகரணங்களை உபயோகித்து எவ்வித விபத்தும் யாருக்கும் நடைபெறாவண்ணம் பணிசெய்வதை உறுதிப்படுத்திட வேண்டும் என்று இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

19. PSC கம்பத்தில் ஏறுவதும், இறங்குவதும் பாதுகாப்பாக இல்லை என்று கருவதால் மீண்டும் RCC கம்பங்களை கொள்ணிதல் செய்து பயன்படுத்தலாம் என வாரியத்தலைமையை வலியுறுத்த மாநிலத் தலைமையை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

20. பொறியாளர்கள் அதிகப்படியான பணி செய்வதற்கு Additional Charges வழங்குவதைப்போல, மின்பாதை ஆய்வாளர் Area பார்ப்பதை தவிர்த்து கம்பியாளர்கள் தனது பணிகளுக்கு Additional Charges வழங்கிட வாரியத்தை வலியுறுத்த மாநிலத் தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

21. ஈரோடு MTR கோட்டத்தில் LTCT பிரிவு இரண்டாம் தளத்தில் Meter எடுத்துச் சென்று வர பணியாளர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் Lift வசதி செய்து தர வேண்டும் எனவும், இல்லையேல் LTCT பிரிவை தரை தளத்திற்கு மாற்றம் செய்திட வேண்டும் எனவும் மேற்பார்வைப்பொறியாளர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

## திருவண்ணாமலை மின்வட்டம் - தீர்மானங்கள்

16.7.2023 அன்று வந்தவாசியில் திட்டத் தலைவர் திரு. A. அருண்பிரசாத் அவர்கள் தலைமையில் நடைபெற்றதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

### தீர்மானங்கள்

1. விருப்ப ஊர்மாறுதல் உத்தரவுகள், வாரிய விதிகளை பின்பற்றப்படாமல் ஒருதலைபட்சமாக ஊர்மாறுதல் உத்தரவுகள் வழங்கப்படுவதை திட்ட நிர்வாகம் வாரிய விதிணிறைகளின்படி ஊர்மாறுதல் உத்தரவுகள் வழங்க இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

2. பதவி உயர்வு வழங்கும்போது சீனியாரிட்டி முறையில் பணியிடம் வழங்க வாரிய விதிகளை பின்பற்றிட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

3. ஆரணி கோட்டத்தில் செயற்பொறியாளர் வளாகத்தில் 6 பிரிவு அலுவலகங்கள் உள்ளது. இப்பிரிவுகளுக்கு மொத்தமாக சேர்த்து சுமார் 60 ஆயிரம் மின் நுகர்வோர்கள் உள்ளனர். இந்நிலையில் இங்கு மின்கட்டணம் வசூல் செய்யும் கௌவுண்டர் ஒன்றுமட்டுமே உள்ள நிலையில் மின் நுகர்வோர்களுக்கும், வசூல் பணியாளர்களுக்கும் அடிக்கடி மோதல் போக்கு உள்ளது. எனவே மின் நுகர்வோர்கள் மற்றும் பணியாளர்கள் நலன்கருதியும், வாரியத்திற்கு வரவேண்டிய வருவாய் நிலுவையில் இல்லாமல் வசூல் பணி மேற்கொள்ள கூடுதலாக வசூல் கௌவுண்டர் அமைக்க இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

4. திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டத்தில் உள்ள 110/33, 33/11கேவி துணை மின் நிலையம் இரவு நேரங்களில் இருள்சூழ்ந்துள்ளது. எனவே தேவையான மின்விளக்குகள் வழங்க நடவடிக்கை எடுக்க இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

5. களப்பணியாளர்களுக்கு தேவையான பீடர் பீஸ் ஒயர், எட்ச் பீஸ் ஒயர் தேவையான அளவு வழங்க நடவடிக்கை எடுக்க இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

6. திருவண்ணாமலை மின் திட்டத்தில் பெரும்பாலான அலுவலகங்களில் சுகாதார மற்றும் தூய்மை பணியாளர்கள் இல்லாமல் பிரிவு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அதனை போக்கிட ஹேண்ட் ரெசிப்ட் வாயிலாக இம்பரஸ்ட் மூலமாகவோ அதை நிவர்த்தி செய்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

7. மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக போராட்டம் நடத்திடும் தொழிற்சங்கங்களுக்கு போராட்டம் நடத்திட மின்சாரம் பாரபட்சமாகவும், வேண்டப்பட்ட, வேண்டப்படாத நிலையில் மின்சாரம் வழங்கப்படுவதை இச்செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

8. TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சங்க பனிமனை ஒதுக்கீடு செய்யப்பட்டு பல மாதங்களாகியும் சங்க பணிமனை இடத்தை காலிசெய்து ஒப்படைப்பு செய்யாமல் பாராமுகமாக உள்ளதை தவிர்த்திடவும், உடனடியாக இடத்தை காலி செய்து ஒப்படைத்திட இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

## வேலூர் மின்வட்டம் - தீர்மானங்கள்

29.07.2023 அன்று வேலூர் மின்வாரிய வளாகத்தில் உள்ள சங்க பணிமனையில் தலைவர் திரு. பா. செந்தில் அவர்கள் தலைமையில் நடைபெற்றதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. எதிர்வரும் மாநில செயற்குழு கூட்டம் 12.08.2023 13.08.2023 கூட்டத்திற்கு முன்பாக வேலூர் மின் திட்டத்தில் அமைந்துள்ள நமது புதிய சங்க கட்டிடத்தை அனைத்து வேலைப்பாடுகளும் முடித்து சங்க கட்டிட திறப்பு விழா செய்வது.
2. 2023-24க்குண்டான புதிய உறுப்பினர்களை கோட்டாளவில் விரிவுபடுத்தி கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
3. கோட்ட அளவில் மகளிர் உறுப்பினர்களை சேர்ப்பது மற்றும் அதிகபடுத்துவது தொடர்பாக தீர்மானம்.
4. கோட்டைச் சுற்றுச் சாலையில் அமைந்துள்ள அலுவலக சங்க பலகை மற்றும் கொடி கம்பம் நடுவது சம்மந்தமாக தீர்மானம்.
5. மேற்பார்வை பொறியாளர் அவர்களை சந்தித்து விருப்ப மாறுதல் பெற்ற பணியாளர்களை பணியிலிருந்து விடுவிக்க கோருதல் சம்மந்தமாக தீர்மானம்.

## கன்னியாகுமரி மின்வட்டம் - தீர்மானங்கள்

01.08.2023 அன்று மாலை திட்டத் தலைவர் திரு. P. வேதமணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. விருப்ப மாறுதல் உத்தரவு பெற்ற பல பணியாளர்கள் உத்தரவு பெற்று பல மாதங்கள் கடந்த நிலையிலும் பணி விடுவிப்பு செய்யப்படவில்லை. பணியாளர்கள் எந்த நோக்கத்திற்காக விருப்ப மாறுதல் கோரியிருந்தனரோ அந்த நோக்கத்தின் பேரில் உத்தரவு வழங்கி விட்டு, அதை நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் வைத்திருப்பது நியாயமான நடவடிக்கையில்லை. எனவே, விருப்ப மாறுதல் உத்தரவு பெற்ற பணியாளர்களை உடனடியாக பணிவிடுப்பு செய்திட நடவடிக்கை எடுக்கும்படி இச்செயற்குழு வட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.
2. களப்பணியாளரிலிருந்து (பட்டயமல்லாதோர்) இளநிலை மின் பொறியாளர் 2ம் நிலைக்கான உள்முகத் தேர்வில், தகுதியுள்ள பணியாளர்கள் பெயர் விடுபடாமல் சேர்க்கப்பட வட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்திடும்படி இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

3. துணை மின் நிலையங்கள் மற்றும் அனைத்து பிரிவு அலுவலகங்களில் பொது உபயோகத்திற்கென 5G வசதியுடன் கூடிய கைபேசி ஒரு எண்ணம் வழங்கிட வட்ட நிர்வாகத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

4. கணக்கீட்டு பிரிவு பணியாளர்களுக்கு நல்ல கணக்கீட்டு கருவி, முறையான கணினி பராமரிப்பு போன்றவை கிடைக்கப்பெற நடவடிக்கை எடுத்திட வட்ட நிர்வாகத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5. பகிர்மானப் பகுதி பணியாளர்களுக்கு மழைக்கவச உடை, சீருடை போன்றவை விரைவில் கிடைக்கப்பெற நடவடிக்கை எடுக்கும்படி வட்ட நிர்வாகத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

6. 110 கிலோ துணை மின் நிலையங்களில் முறைப்பணியில் போதிய கல்வித்தகுதி, பணி அதிகாரம் மற்றும் பணி அனுபவம் இல்லாத பணியாளர்களை ஈடுபடுத்தி வருவதை இச்செயற்குழு கவலையோடு பார்க்கிறது. பல கோடி மதிப்புள்ள வாரிய சொத்துகளின் பேரில் உரிய அக்கறை கொண்டு, தகுதியுள்ள பணியாளர்களை ஒதுக்கீடு செய்து முறைப்பணியை மேற்கொள்ள இச்செயற்குழு வட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

7. துணை மின் நிலையங்களில் முறைப்பணி இயக்குநர்கள் பணியிடம் நிரப்பப்படாத நிலையில், அப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு (உதவி பணியாளர் உட்பட) இரட்டிப்பு ஊதியம் போன்ற சலுகைகள் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்திட இச்செயற்குழு வட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

8. களப்பணியில் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில், பணிக்குறைபாடு காரணமாக எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட பணியாளரை பணியிடை நீக்கம் செய்வதாலும், குறைந்தபட்சம் 3 மாதம் முதல் 6 மாத காலம் வரை தற்காலிக பணியிடை நீக்கத்தில் வைத்திருப்பதாலும், அவர்கள் எவ்வித வாரியப் பணியையும் செய்யாமல் இருக்கும் நிலையில் பணியிடை நீக்க காலத்திற்கு முழுமையாக ஊதியம் வழங்குவதால், வாரியத்திற்கு பெரும் ஊதிய இழப்பும், மனித திறன் இழப்பும் ஏற்படுவதை கருத்தில் கொண்டு, குற்றங்களின் கடினத்தன்மையை நன்கு ஆராய்ந்த பின்னர் தற்காலிக பணியிடை நீக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்படி உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தும்படி வட்ட நிர்வாகத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

9. கேங்மேன் பணியாளர்களுக்கு விதிமுறைகளுக்கு முரணான பணி ஒதுக்கீடு செய்வதால் ஏற்படும் மின் விபத்துகளுக்கு பணி ஒதுக்கீடு அதிகாரம் பெற்றவர் என்ற அடிப்படையில் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலரே பொறுப்பாளியாவார் என்பதை உறுதிபடுத்திட இச்செயற்குழு நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

10. திரு. P. வேதமணி / கணக்கு மேற்பார்வையாளர்கள் அவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை காரணம்காட்டி பணி ஓய்வு பணப் பயன்களை நிறுத்தி வைத்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்து, பணப் பலன்களை உடனடியாக வழங்கிட வாரியத் தலைவரை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது. திரு. P. வேதமணி அவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் உடன் ஒழுங்கு நடவடிக்கைக்கு நிலையில், திரு. P. வேதமணி அவர்களுக்கு மட்டும் நாளது வரை வழங்கப்படாமல் இருப்பது ஒரு தலைபட்சமாகவோ நடவடிக்கையாக இச்செயற்குழு கருதுகிறது.

## MTPS மேட்டூர் அனல் மின்நிலையம் - தீர்மானங்கள்

25.07.2023 மாலை 5.30 மணிக்கு மேட்டூர் சங்க பணிமனையில் திரு. G. சந்தோஷ்குமார் அவர்ள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. மேட்டூர் அனல் மின் நிலைய கிளைக்கு தொழிற்சங்க அலுவலகம் ஒதுக்கீடு வழங்க இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
2. வாரிய குடியிருப்பு பகுதியில் CCTV மற்றும் பாதுகாவலர் வசதி ஏற்படுத்தி தருமாறு இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
3. கட்டுப்பாட்டு அறையில் ஏற்கனவே உதவி பொறியாளர்கள் முறைப்பணியை Unit Wise பார்த்து வந்தார்கள். 2020க்கு பிறகு STAGE Wise ஆக பார்க்கும் நிலை தற்போது உள்ளதை மாற்றியமைத்து ஏற்கனவே உள்ளது போல் நடைமுறைபடுத்த வேண்டி இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
4. மேட்டூர் அனல் மின் நிலையம்-1ல் களப்பணியாளர்களின் பதவி உயர்வுகளை காலதாமதமின்றி உடனடியாக வழங்கிட வேண்டி இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
5. அனல் மின் நிலையங்களில் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமை விடுமுறை வழங்க உத்தரவு பெற்றுத்தர மாநில தலைமையை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
6. AE Internal (உள்முகத்தேர்வு)-/ இயந்திரவியல், மின்னியல், கட்டிடவியல், TA(Mechanical) உள்ணிகத் தேர்வு நீண்டகாலமாக எடுக்காததாலும் மற்றும் TA to JE 2nd grade (Mechanical) பதவி உயர்வு வழங்காததாலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே உடனடியாக உள்ணிகத் தேர்வும், பதவி உயர்வும் அளித்திட வேண்டுமாய் இச்செயற்குழு மாநில தலைமையை கேட்டுக் கொள்கிறது.
7. மகளிரணிச் செயலாளராக திருமதி. A. மைதிலி துணை செவிலியர் அவர்களை இச்செயற்மு நியமனம் செய்து பாராட்டுகிறது.

## திருநெல்வேலி மின்வட்டம் - தீர்மானங்கள்

28.07.2023 அன்று மின்வாரிய வளாகத்தில் உள்ள சங்க பணிமனையில் மாநில உபதலைவர் திரு. N. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. பயணப்படி (TA Bill) கொரோனா காலத்தில் 75% சதவிகிதமாக மாற்றப்பட்டதை 100% சதவிகிதமாக அரசுத்துறை பணியாளர்களுக்கும் வழங்கப்படுவதைப்போல் மின்துறை பணியாளர்களுக்கும் பெற்றுத் தர மின்வாரியத் தலைமைக்கு வலியுறுத்த இச்செயற்குழு வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. துப்புரவு பணியாளர்கள் இல்லாத அலுவலகங்களில் துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்ய இச்செயற்குழு வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. கடந்த 16.05.2023 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின்வாரிய பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வாரிய உத்தரவு எண்.13 மற்றும் 14 தேதி 24.05.2023இல் ஊதிய

உயர்வு வழங்கப்பட்டது. 01.12.2019க்கு பின் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் பகுதி நேரப்பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படாமல் உள்ளதை வாரியத் தலைமைக்கு வலியுறுத்த இச்செயற்குழு வாயி'ாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. 2014க்கு முன்னர் கணக்குப் பிரிவில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் Accountancy Lower மற்றும் Higher/B.com Passed செய்தவர்களுக்கு வழங்கப்பட்ட Incentive செல்லாதென முடிவெடுக்கப்பட்டு வாங்கிய Incentive தொகையை திரும்ப கட்டும்படி Audit wing கூறியுள்ளதை ரத்து செய்ய இச்செயற்குழு வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. Labour Welfare Officer பதவியை மண்டல அளவில் ஒருவர் என நியமனம் செய்ய இச்செயற்குழு வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. பாதுகாப்பு உபகரணங்கள் டார்ச்லைட், கையுறை, மழைக்கோட்டு, LT Fuse wire மற்றும் இதர தளவாட சாமான்கள் வழங்கிட இச்செயற்குழு வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. விருப்ப மாறுதல் பெறப்பட்டவர்களுக்கு Reliving Order பெறப்பட்ட பின்புதான் Reposting Order போட்டுத் தரப்படும் என்பதை நிறுத்திட வேண்டும் என இச்செயற்குழு வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8. கணினி பழுதாகியும், போதுமான அளவு கணினி இல்லாத பிரிவு அலுவலகங்களில் புதிய கணினி கொடுக்க இச்செயற்குழு வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. உதவியாளர் (கணக்கு)லிருந்து கணக்கு மேற்பார்வையாளர் பதவி உயர்விற்கு மூன்று ஆண்டுகள் பணி நிறைவு செய்தபின் பதவி உயர்வு ஆக No.18 தேதி 02.06.2020படி நடைமுறைப்படுத்த இச்செயற்குழு மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## மதுரை GCC (பொது நிர்மான வட்டம்) - தீர்மானங்கள்

28.07.2023 அன்று மதுரையில் திட்டத் தலைவர் திரு. G. ராஜபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

### தீர்மானங்கள்

1. கொரோனா காலத்தில் 25% பயணப்படி நிறுத்தி வைக்கப்பட்டு 75% வழங்கப்பட்டது. தற்சமயம் இயல்பு நிலைக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்தும் பயணப்படி 75% தான் வழங்கப்படுகிறது. பயணப்படியை முன்பு போல் 100% வழங்கும்படி கேட்டுக் கொள்கிறது.

2. களப்பணியாளர் முகவர் 2ம் நிலையிலிருந்து முகவர் முதல் நிலை பதவி உயர்வு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. கள உதவியாளர் (Field Assistant) அனுமதிக்கப்பட்ட பதவி 61 இருந்தும் தற்சமயம் அனைத்தும் காலியாகவே உள்ளது. விரைந்து காலிப்பணியிடங்களை நிரப்ப தலைமைக்கு பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. களப்பணியாளர்கள் பொருந்துனர் (Fitter) பதவியில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. சிறப்பு நிலை முகவர் (Special Gr.Foreman) 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் பணியாளர்களுக்கு F.T.O (Field Technical Officer) ஆக பதவி உயர்வு வழங்க தலைமைக்கு பரிந்துரை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. காலியாக உள்ள அனைத்து பணியிடங்களுக்கு (Provincial/RWE/Technical) விரைவில் தகுந்த பணியாளர்களை நியமிக்க தலைமைக்கு பரிந்துரை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. களப்பணியாளர்களின் முதன்மைப் பட்டியல் விரைந்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8. பொதுக்கட்டுமான வட்டத்தில் பணிபுரிந்த ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்திட தலைமைக்கு பரிந்துரை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. நிறுத்தி வைத்துள்ள ஒப்படைப்பு விடுப்பு (SLS) மீண்டும் அனுமதி அளித்திட தலைமைக்கு பரிந்துரைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## கரூர் மின்வட்டம் - தீர்மானங்கள்

22.07.2023 அன்று கரூரில் திட்டத் தலைவர் திரு. P.V. ராஜலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. கரூர் மின் பகிர்மான வட்டத்தில் நீண்ட நாட்களாக அடையாள அட்டை வழங்கப்படாமல் உள்ளதால் உடனடியாக அடையாள அட்டை வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. களத் தொழிலாளர்களுக்கு சீருடை பாதுகாப்பு உபகரணங்களான இடுப்பு கயிறு, கையுறை போன்றவை வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. துணை மின் நிலையங்களில் பழுதடைந்துள்ள நிலையில் உள்ள கட்டிடங்களை புணரமைத்து உபகரணங்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது (குறிப்பாக மலைக்கோவிலூர் ஆண்டி செட்டிபாளையம் பழுதடைந்து காணப்படுகிறது)

4. தொழிலாளர்களுக்கான பணப்பயன்கள் TANGEDGO, TANTRANSCO என வித்தியாசம் இல்லாமல் விரைந்து வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. சம்பளப் பட்டியல் மட்டுமே வாரியத்தால் ஒதுக்கப்பட்டுள்ள இமெயிலில் வருகிறது. இனிவரும் காலங்களில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து பணப்பயன்கள் விபரம் தெரிவிக்க ஆவண செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. கரூர் மின் பகிர்மான வட்டத்திற்குள் Within circle விருப்ப மாறுதல் கோரும் கேங்மேன் பணியாளர்களுக்கு மாறுதல் உத்தரவு வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. கரூர் மின் பகிர்மான வட்டத்திற்குள் விருப்பமாறுதல் உத்தரவு வழங்கப்படாமல் உள்ளதாக தெரிய வருகிறது. இனிவரும் காலங்களில் அவ்வாறு நிகழாமல் இருக்க பூர்த்தி செய்யப்பட்ட மாதிரி விண்ணப்பம் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. (Division to division/within division/ with in subdivision/subdivision to subdivision)

# கோபி மின்வட்டம் - தீர்மானங்கள்

30.07.2023 அன்று கோபி மின்வட்ட செயற்குழு திரு. R. கிருஷ்ண மோகன்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. 01.12.2019 முதல் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு 6% ஊதிய உயர்வும். 10 ஆண்டு காலம் பணியாற்றிய அனைத்து பணியாளர்களுக்கு 3% சர்வீஸ் வெய்ட்டேஜினை பெற்றுக் கொடுத்த மாநில தலைமைக்கு இச்செயற்குழு பாராட்டினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

2. 01.12.2015 முதல் 22.02.2018க்கு இடைப்பட்ட காலத்தில் பணியேற்பு செய்தவர்களுக்கு வழங்கிய ஊதிய உயர்வினை பிடித்தம் செய்ய 30.05.2023 வழங்கப்பட்ட உத்தரவினை மறு உத்தரவு வரும் வரை நிறுத்தம் செய்ய உத்தரவு பெற்றுத் தந்த மாநில தலைமையினை இச்செயற்குழு பாராட்டுகின்றது.

3. மின்வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பாமலும் வேலைப்பளு ஒப்பந்தம் தொழிற்சங்கங்களிடம் பேசாமலும் தன்னிச்சையாக (out sourcing) அவுட் சோர்சிங் முறையினை அமுல்படுத்தும் அயல் பணியில் பணியாற்றி வரும் மின்வாரியச்செயலர் அவர்களை மின்சார வாரியத்திலிருந்து மாறுதல் செய்திட மாநில தலைமை எடுத்த முயற்சியை இச்செயற்குழு பாராட்டுகின்றது.

4. 01.12.2019 ணிதல் 16.05.2023க்கு இடைப்பட்ட காலத்தில் பணியேற்பு செய்த வாரிசு வேலை பணியாளர்கள் மற்றும் கேங்மேன் பணியாளர்களுக்கு மின் வாரிய தலைவர் 09.06.2023 அன்று பேச்சுவார்த்தை நடத்தியதனை ஏற்றுக் கொண்டபடி பணியாளர்களுக்கு ஊதிய உயர்வினை பெற்றுத்தர மாநில தலைமையினை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5. 09.06.2023 அன்று நமது தொழிற்சங்கத்திடம் மின்வாரிய தலைவர் நேரடி பேச்சுவார்த்தையின் மூலமாக தீர்வு காணப்பட்ட கீழ்கண்ட கோரிக்கைகளான.
   - I. கேங்மேன் பணியாளர்களின் விருப்ப மாறுதல் உத்தரவு.
   - II. விடுபட்ட 5000 கேங்மேன்களை பணியில் அமர்த்துவது.
   - III. K2 அக்ரிமெண்ட் முறையினை கைவிட்டு பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு PWD Schedule of rafeல் ஊதியம் அளித்து பணியில் அமர்த்துவது.
   - IV. சுமார் 1000 பகுதி நேரப் பணியாளர்களுக்கு பணி நியமனம் பெற்றுத் தருவது.
   - V. கேங்மேன் பணியாளர்களை கள உதவியாளராக பதவி மாறுதல் செய்வது மேற்கண்டவற்றிற்கு மாநில தலைமை உரிய நடவடிக்கை எடுத்து உத்தரவு பெற்றுத் தந்திட இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

6. BP2-வை மின்வாரியம் வழங்கிய உத்தரவினை ரத்து செய்திட மாநில தலைமை நடவடிக்கை எடுத்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

7. மின்சார வாரியம் வேலைப்பளு பேச்சுவார்த்தையினை விரைவில் துவக்கிடமாநில தலைமை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

8. திரு. M. ரமேஷ் மின்பாதை ஆய்வாளர்/மின்பாதைகள்பிரிவு/செண்பாகபுதூரில் இருந்து தற்காலிக பணியிட மாற்றம் செய்து உத்தரவு வழங்கப்பட்டதை அடுத்து அவரை பணி

விடுவிப்பு செய்யுமாறு இச்செயற்குழு கோபி மேற்பார்வை பொறியாளர் அவர்களை கேட்டுக் கொள்கிறது.

9. ஊதிய உயர்வுக்கு களப்பணியாளர்களை கொடுத்த Option form- ல் ஊதியவிகிதம் தவறாக உள்ளவர்களுக்கு மீண்டும் ஒரு முறை Revised pay Fixationoption form கொடுக்கும் வகையில் வாரிய தலைமையில் பேசி உத்தரவு பெற்றுத் தருமாறு இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

10. கோபி மின் பகிர்மான வட்டம் 16.07.1995 ஆண்டு துவங்கிய முதல் நிர்வாக பிரிவில் இது வரை கடைபிடிக்கப்பட்டு வந்த களப்பணியாளர்களின் பதவி உயர்வுகள் ஒரு காலியிடம் ஏற்பட்டாலும் பதவி உயர்வு தேர்வு பட்டியலில்உள்ளதை 06/2023ல் நிறுத்தி வைத்ததை இச்செயற்குழு கவனத்துடன் பரிசீலனை செய்தது, இனி வரும் காலங்களில் இது வரை இருந்து வந்த நடைமுறைகள் பின்பற்றபட்டு எந்த ஒரு பணியாளர்களும் பணபயன்களும் பாதிக்கப்படாமலும் அனைத்து நிலை பதவி உயர்வுகளும் உடனுக்கு உடன் வழங்கிடவும் ஒரு கால குறிப்பிட்ட நாட்களுக்குள் பணி விடுப்பு செய்யுமாறும் இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.

11. மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் மற்றும் கோபி, சத்தி, பவானி கோட்ட அலுவலகத்தில் கோப்புகளை பாதுகாத்திட ஒரு பாதுகாப்புஅறையினை உருவாக்கிடவும் கோப்புகளை பதிவு எழுத்தர் மூலமாக பராமரிப்பு செய்திட மேற்பார்வை பொறியாளர் கோபி அவர்களின் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

12. கோபி மத்திய அலுவலக வளாகத்தில் எங்களது தொழிற்சங்க அலுவலக கட்டிடம் கட்டிட இடம் ஒதுக்கீடு செய்து தருமாறும் இச்செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.

13. கோபி மத்திய அலுவலகத்தில் MRT பிரிவில் பணிபுரிந்து வரும் திரு. B. பிரபாகரன் தொழில்நுட்ப உதவியாளர் அவர்கள் எங்கள் தொழிற்சங்க மத்திய அலுவலக செயலாளர் ஆக நியமித்திட இச்செயற்குழு ஏக மனதாக தேர்வு செய்கிறது.

14. கோபி திட்ட துணைச் செயலாளர் ஆக பணிபுரிந்து வந்த திரு. J. சம்பத்குமார் முகவர் முதல் நிலை K.R. பாளையம் அவர்கள் ஈரோடு மின் பகிர்மான வட்டம் ஈங்கூர் பிரிவு அலுவலகத்தில் விருப்ப மாறுதல்காரணமாக பணி ஏற்பு செய்த காரணமாக பவானி மேற்கு பிரிவில் பணிபுரிந்து வரும் கணக்கீட்டாளர் திருமதி. T. நிந்தியா அவர்களை திட்ட துணைச் செயலாளர் ஆக நியமித்திட இச்செயற்குழு ஏக மனதாக தேர்வு செய்கிறது.

## கோவை (வடக்கு) மின்வட்டம் - தீர்மானங்கள்

21.7.2023 அன்று திட்டதலைவர் திரு. அ. இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் கோவை மண்டல சங்க பணிமனையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

### தீர்மானங்கள்

1. National Health Insurance. (NHIS) மருத்துவ காப்பீடு திட்டத்தை எளிமைப்படுத்தி எல்லா மருத்துவமனைகளிலும் அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை பெறவும், சிகிச்சை தொகை எளிதில் கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

2. NHIS மருத்துவ காப்பீடு திட்டத்தில் திருமணம் ஆன வாரிய பணியாளர்களின் வயதான பெற்றோர்களையும் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனடைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

3. கேங்மேன் பணியாளர்களின் விடுப்பு மற்றும் இதர சலுகைகளுக்கான உத்தரவினை உடனடியாக வழங்க வேண்டுகிறோம்.

4. ஏற்கனவே தகுதிதான் பட்டியல் கேட்டு, இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் உள்ள TA to JE II, Non Dip to JE II பதவி உயர்வை உடனடியாக வழங்கிட வேண்டுகிறோம்.

5. 2017 முதல் நிலுவையில் உள்ள Asst Engineer பதவிகளுக்கு உடனடியாக உள்முகத் தேர்வு மூலம் தேர்வு செய்து நிரப்பிட வேண்டுகிறோம்.

6. கேங்மேன் பணியாளர்களுக்கு உள்முகத் தேர்வுக்கான வாய்ப்பினை அளித்திடல் வேண்டும். கேங்மேன் பதவிகளை கள உதவியாளர்களாக மாற்றிட வேண்டும்.

7. ஆரம்ப நிலை பதவிகளான தொழிற்நுட்ப உதவியாளர். உதவி மின் பொறியாளர், வரைவாளர், இளநிை' உடவியாளர், கணக்கீட்டாளர் மற்றும் கள உதவியாளர் காலி பணியிடங்களை உடனடியாக நிரப்பிடல் வேண்டுகிறோம்.

8. 2009ல் பணியேற்பு செய்த களஉதவியாளர்களுக்கு 2 ஆண்டுகள் அடிப்படை சம்பளம் நிலுவையுடன் வழங்க வேண்டியதை, தொழிலாளர் நலன் கருதியும், வாரிய நலன் கருதியும், அவர்களுக்கு நிலுவைத்தொகை இன்றி தற்போதுள்ள பதவியில் 3 ஆண்டுயர்வு வழங்கி, நீதிமன்ற வழக்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டுகிறோம்.

9. திரு. M. கருப்புசாமி, அமைப்பு செயலாளர் அவர்களின் பணிதன்மை நிர்ணய உத்தரவை விரைந்து பெற்று தர வேண்டுகிறோம்.

10. விடுபட்ட ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு நிரந்தரம் செய்யப்பட வேண்டும். ஒப்பந்த பணியாளர்களை மின்சார வாரியமே நேரடியாக பணியமர்த்திக் கொள்ளவேண்டும்.

11. புதிய பென்ஷன் திட்டத்தை கைவிட்டு பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

12. கொரோனா காலத்தில் தொழிலாளர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட SLS மற்றும் Bonus முழுமையாக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

13. BP.2 முழுவதும் ரத்து செய்ய வேண்டுகிறோம்.

14. மாண்புமிகு உயர்நீதிமன்ற 22.06.2015 தீர்ப்பின் மூலம் LI/CI to JE II பதவி உயர்வு (ஒரு முறை மட்டும்) வழங்க உத்தரவிட்டதில், 03.08.2015 அன்று கேட்கப்பட்ட தகுதிகாண் பட்டியலில் 6 ஆண்டுகள் வாரியப்பணி அனுபவ தகுதி இருந்தும், LI/CI யில் 2 ஆண்டுகள் பணி அனுபவம் இல்லை என்று சிலரை தகுதி பெறாதவர்களாக நிறுத்தி வைத்து அதில் சிலருக்கு 2018 மற்றும் 2022ல் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளன. அதனை சரிசெய்து முதலில் தேர்வு செய்யப்பட்டவர்களின் பணிதன்மை வரிசையில் பொருத்தம் செய்து தர வேண்டுகிறோம்.

## சேலம் மின்வட்டம் - தீர்மானங்கள்

26.07.2023 அன்று சேலம் மின்வட்ட சங்க அலுவலகத்தில் செயல் தலைவர் திரு. பி. கஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. 01.12.2019 முதல் வழங்கிட வேண்டி ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை சரியான முறையில் வாரியம் செயல்படுத்திட பல்வேறு வியுகங்களை மேற்கொண்ட எம்ப்ளாயீஸ் பெடரேசன் தலைமைக்கு சேலம் வட்ட கிளை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.
2. திருப்பூர் மின்வட்டத்திலிருந்து சேலம் மின்வட்டத்திற்கு விருப்ப மாறுதல் வழங்கப்பட்ட வாரிய தலைமை பொறியாளரின் உத்தரவை ரத்து செய்து பணியாளர்களின் நலம் காத்த எம்ப்ளாயீஸ் பெடரேசன் பொதுசெயலாளர் அவர்களுக்கு சேலம் கிளையின் சார்பாக நன்றியினை செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது.
3. ஊதிய உயர்வு நன்கொடை மாநில செயற்குழு முடிவின்படி சேலம் மின்வட்ட தொழிலாளர்களிடம் பெற்று மாநில தலைமைக்கு செலுத்திட வேண்டும் என செயற்குழு ஏக மனதாக முடிவு செய்கிறது.
4. சேலம் மின்பகிர்மான வட்ட களப்பணியாளர்களுக்கு இது நாள்வரை இறுதி செய்யப்பட முதன்மை பட்டியல் வழங்காமல் இருந்து வருவதை பரிசீலித்து மேற்பார்வை பொறியாளர் /சேலம் அவர்கள் அனைத்து களப்பணியாளர்களுக்கும் இறுதி செய்யப்பட்ட முதன்மை பட்டியல் புத்தக வடிவில் அச்சிட்டு வழங்கிட வேண்டுமாய் இச்செயற்குழு ஒரு மனதாக கேட்டுக் கொள்கிறது.
5. அனைத்து செயற்பொறியாளர் அலுவலக நுழைவாயிலும் கொடிகம்பம் மற்றும் அறிக்கை பலகை அமைத்திட வேண்டும் எனவும் செயற்குழு முடிவு செய்கிறது.

## இராமநாதபுரம் மின்வட்டம் - தீர்மானங்கள்

இராமநாதபுரம் மின்வட்ட செயற்குழு தலைவர் V. காதர் பாட்ஷா அவர்கள் தலைமையில் நடைபெற்றதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானங்கள்**

1. 01.12.2019 ஊதிய உயர்வு கிடைக்க மிக சிரத்தை எடுத்து பெற்று தந்த நமது மாநில பொதுச்செயலாளருக்கும், மாநில தலைமைக்கும் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.
2. வாரிய பணியில் கேங்மேன்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களை வாரிய உத்தரவுப்படி கடந்த ஜனவரி அதாவது 01/2023 படி விருப்ப ஊர் மாறுதல் விண்ணப்பத்தை பரிசீலனை செய்யாமல் இன்றுவரை மின் வாரிய தலைமைப்பொறியாளர் பணியமைப்பு சென்னை அவர்களிடம் நிலுவையில் இருந்து வரும் சூழ்நிலையிலும் அதற்கு எந்த முடிவும் எடுக்காத நிலையில் அதுவும் இன்று வரை நிலுவையில் இருந்து வருவதை ஒட்டிக் காண்பித்து இதே நிலை வாரியத்தால் தொடர்ந்தால் நீதிமன்றத்தை நாடி விருப்ப மாறுதல் பெற்றுத் தர நமது எம்ப்ளாயீஸ் பெடரேஷன் தலைமையை இராமநாதபுரம் கிளை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.
3. கடந்த இராமநாதபுரம் மின்திட்டத்தில் பார்த்திபனூர் பிரிவில் பணிபுரிந்த நமது சங்க உறுப்பினர் K. மகேந்திரன் வணிக ஆய்வாளர் என்பவரை யாரோ இவரது பெயரை பயன்படுத்தி

அவர் கையொப்பம் செய்தது மாதிரி அலுவலக கோப்பை வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சென்னை அவர்களுக்கு தபாலில் அனுப்பியதாக கடந்த 08.05.2023 அன்று தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை ஒட்டிக் காண்பித்து இதில் மரியாதைக்குரிய வாரியத்தலைவர் வாய்மொழியாக சொன்னதாக இந்த தற்காலிக உத்தரவு தவறாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தரவு வாரிய தலைவரின் உத்தரவின் பேரில் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இதில் மாநில பொது செயலாளர் தலையிட்டு தற்காலிக பணிநீக்கம் உத்தரவை ரத்து செய்ய முழு விபரத்துடன் எடுத்துரைத்து மேற்கண்ட நிகழ்வை மட்டும் தனியாக எழுதி வாரிய தலைவருக்கு கடிதம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

4. தற்போது CITU தொழிற்சங்கத்திலிருந்து விலகி நமது தொழிற் சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்த R. முத்துக்கருப்பன் வணிக ஆய்வாளர் முன்னர் பார்த்திபனூர் பிரிவு தற்போது கணிதி ஊரகம் வடக்கு அவர்களுக்கு கொரனா காலக்கட்டத்தில் அவரால் அனுப்பப்பட்ட 11 மாத மருத்துவ விண்ணப்பங்களை முன்னர் உதவி மின் பொறியாளர் பார்த்திபனூர் அதை பரிந்துரை செய்து அனுப்பாமல் அதை என்ன செய்தார் என்ற விபரமும் மேற்கண்ட பணியாளருக்கு தெரியப்படுத்தாமல் இருந்த பின்பு அதற்கு தற்போது நமது சங்கத்தில் இணைந்த பின்பு பணியாளருடைய மருத்துவ விண்ணப்ப ஜெராக்ஸ் நகலை வைத்து 11 மாத சம்பளம் பெற்றுத் தருவதற்கு நமது தொழிற்சங்க வாயிலாக மேற்பார்வை பொறியாளர் இராமநாதபுரம் அவர்களுக்கும் செயற்பொறியாளர் பரமக்குடி அவர்களுக்கும் சங்க புகார் கடிதமாக அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

5. இராமநாதபுரம் மின் திட்டத்தில் களப்பணியாளர்களுக்கு போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு கடிதம் வழங்கி நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்படுகிறது.

6. இராமநாதபுரம் மின் திட்டத்தில் குறிப்பாக கேங்மேன் பணியாளர்களுக்கு ஒரு சில பிரிவு அலுவலர்கள் ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை தினங்களில் பணி செய்தமைக்கு ஈடு செய்யும் விடுப்பு வழங்க மறுக்கிறார்கள் என நமது சங்க கவனத்திற்கு வந்துள்ளது. இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்படுகிறது.

7. இராமநாதபுரம் மின்திட்டத்தில் உள்ள துணை மின் நிலையங்களில் உள்ள இரவு பணி பார்க்கும் முறைப்பணியாளர்களுக்கும் இரவில் உதவிக்காக யாருமில்லாமல் தனியாக முறைப்பணி பார்த்து வருவதாக எங்கள் சங்க கவனத்திற்கு வந்துள்ளது. அதில் நடவடிக்கை எடுக்க மேற்பார்வை பொறியாளர் இராமநாதபுரம் அவர்களுக்கு சங்க கடிதம் கொடுக்க தீர்மானிக்கப்படுகிறது.

8. இராமநாதபுரம் மின் திட்ட கிளையில் நமது சங்கம் முதன்மைச் சங்கமாக வருவதற்கு புதிய உறுப்பினர் சேர்க்கை எண்ணிக்கை முக்கியம் அதை அதிகரிக்க நாம் அனைவரும் முன்னின்று முயற்சி எடுக்க இச்செயற்குழுவில் தீர்மானிக்கப்படுகிறது.

9. இராமநாதபுரம் மின் திட்ட கேங்மேன் பணியாளர்களுக்கு CPS பிடித்தம் செய்ய மேற்பார்வை பொறியாளர் இராமநாதபுரம் அவர்களுக்கு கடிதம் கொடுக்க தீர்மானிக்கப்படுகிறது.

## நான்மணிக்கடிகை பாடல். 15 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

## பறைநன்று பண்ணமையாஅ யாழின்!

*பறைநன்று பண்ணமையா யாழின் - நிறைநின்ற*
*பெண்ணன்று பீடிலா மாந்தரின் - பண்ணழிந்து*
*ஆர்தலின் நன்று பசித்தல் - பசைந்தாரின்*
*தீர்தலின் தீப்புகுதல் நன்று.*

**கருத்துரை**

செவிகளுக்கு இனிமை உணர்வைத் தரும் பண்ணிசை அமையாத யாழைவிடப் பேரோசை எழுப்பும் பறை நல்லது!

பெருந்தன்மை என்னும் பேராண்மை இல்லாத ஆண் மக்களைவிட, அடக்கம் மிகுந்த கற்பரசிகளான பெண் மக்கள் நல்லவராவார்!

ஆக்கிய உணவு ஆறிப் பதனழிந்த பிறகு அதை உண்பதைவிடப் பசியால் வருந்தித் துன்பப்படுதல் நல்லது!

அதுபோல், நம்மை விரும்பி அன்பு செலுத்துபவர்களை விட்டு நீங்கி வாழ்வதைவிட ஏரியில் வீழ்ந்து உயிர்விடுதல் மிகவும் நல்லது!

**அருஞ்சொற்பொருள்:**

பண் அமையா = பண்ணிசை அமையாத; யாழின் = ''யாழ்'' என்னும் இன்னிசைக் கருவியினும்; பறை நன்று = ''பறை'' என்னும் பேரோசைக் கருவி நன்றாம்; பீடு இலா = பெருந்தன்மை அமையாத; மாந்தரின் = ஆண் மக்களினும்; நிறை நின்ற = கற்பில் நின்று அடக்கமுடைய; பெண் நன்று = பெண் மக்கள் நல்லர்; பண் அழிந்து = பதங்கெட்டு; ஆர்தலின் = உண்டலினும்; பசித்தல் நன்று = பசியுடன் வருந்துதல் நன்று; பசைந்தாரின் = தம்மை விரும்பினாரினின்றும்; தீர்தலின் = நீங்கி உயிர் வாழ்தலை விட; தீப்புகுதல் நன்று = எரியில் வீழ்ந்து உயிர் விடுதல் நல்லது.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**✆ : 9841446621 ✆: 8939152361**
**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*



# அத்தியாயம் - 16

## மனித உடலைப் பாதிக்கின்ற குற்றங்கள்

வழக்கறிஞர் **தேவிபாலா குணசேகரன்,**
**M.A., M.L.,**

**பிரிவு 349 ( Section 349 )**

**Force - தாக்குதல் அல்லது வன்முறை - விளக்கம்**

ஒருவருடைய உடலை அசைப்பது, அல்லது அசையாமல் தடுப்பது அல்லது அசைவில் மாற்றத்தை உண்டாக்குவதும், அல்லது ஒரு பொருளை அசைத்தோ, அசையாமல் தடுத்தோ, அதனுடைய அசைவில் மாற்றத்தை உண்டாக்குவதன் மூலமோ, அப்பொருள் அந்த மற்றவரது உடலில் ஒரு பகுதி அல்லது, உணர்வினைப் பாதிக்கும் வகையில் எதையேனும் தொடர்பு கொள்ளச் செய்தால் அது தாக்குதல் அல்லது வன்முறைப் பிரயோகம் ஆகும்.

வன்முறைப் பிரயோகத்திற்கான வழிகள் முதலாவதாக - தம் சொந்த உடற்சக்தியால்

இரண்டாவதாக - தன்னால் அல்லது பிறரால் மேற்கொண்டு ஏதும் செய்யப்படாமலே இயக்கம் அல்லது இயக்க மாற்றம் அல்லது செயல் நிறுத்தம் நிகழும்படி பொருள் எதையேனும் பயன்படுத்துதல்.

மூன்றாவதாக - விலங்கு எதையேனும் இயங்கும்படி, அதன் இயக்கத்தை மாற்றிவிட்டு அல்லது இயக்கத்தை நிறுத்தும்படி தூண்டுவது.

**பிரிவு 350 (Section 350)**

**Criminal Force - வன்முறைத் தாக்குதல் அல்லலது குற்றமுறு வன்முறை விளக்கம் -**

**குற்றம் :** என்று தெரிந்தே, உள்நோக்கத்தோடு, ஒருவரின் சம்மதமின்றி அவருக்குக் கேடு, அச்சம் அல்லது தொல்லை தரும் பொருட்டு வன்முறையைப் பயன்படுத்துதல் .

**பிரிவு 351 (Section 351)**

**Assault - தாக்குதல்**

ஒருவர், தம் எதிரிலுள்ள மற்றொருவரை வன்முறையில் தாக்கப் போவதாக அச்சுறுத்தும் நோக்கத்துடன் செய்கின்ற சைகை அல்லது ஆயத்தமானது வன்முறையில் தாக்க முனைதல் ஆகும்.

**விளக்கம்:** வெறும் பேச்சு மட்டுமே தாக்குதல் ஆகாது. ஆனால் செய்யும் சைகை அல்லது ஆயத்தத்திற்கு அந்தப் பேச்சு தரும் பொருள் வன்முறையில் தாக்க முனைவதாகக் கொள்ளும்படி அமைந்திருக்கும்.

**பிரிவு 352 (Section 352 )**

**குற்றம் :** கடுமையாக ஆத்திரமூட்டப்பட்டதன் பேரில் அல்லாமல் மற்றபடி தாக்குதல் அல்லது வன்முறையில் தாக்குதல்.

**தண்டனை :** 3 மாதங்கள் சிறைவாசம் அல்லது ஐநூறு ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 353 (Section 353 )**

ஒரு பொது ஊழியரை அவரது கடமையைச் செய்வதிலிருந்து தடுப்பதற்காத் தாக்குதல் அல்லது வன்முறையில் தாக்குதல்.

**தண்டனை :** 3 ஆண்டுகள் சிறைவாசம் அல்லது .அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 354 (Section 354 )**

ஒரு பெண்ணின் மானத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் உட்கருத்துடன் அவரைத் தாக்குதல் அல்லது வன்முறையில் தாக்குதல்.

**தண்டனை :** 2 ஆண்டுகள் சிறைவாசம் அல்லது .அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 355 (Section 355 )**

கடுமையாகவும் திடீரென்றும் ஆத்திரமூட்டப்பட்டதன் பேரிலல்லாமல் மற்றபடி ஒருவரை அவமானப்படுத்தும் உட்கருத்துடன் தாக்குதல் அல்லது வன்முறையில் தாக்குதல்.

**தண்டனை :** 2 ஆண்டுகள் சிறைவாசம் அல்லது .அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 356 (Section 356)**

**குற்றம் :** ஒருவர் அணிந்துள்ள அல்லது கொண்டு செல்கின்ற பொருளைத் திருட முயலும் போது தாக்குதல் அல்லது வன்முறையில் தாக்குதல்

**தண்டனை :** 2 ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 357 (Section 357 )**

**குற்றம் :** ஒருவரைச் சட்ட விரோதமாக அடைத்து வைக்க முயன்று தாக்குதல் அல்லது வன்முறையில் தாக்குதல்.

**தண்டனை :** 1 ஆண்டு சிறைவாசம் அல்லது 1000 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 358 (Section 358)**

**குற்றம் :** கடுமையாகவும், திடீரென்றும் ஆத்திரமூட்டப்பட்டதன் பேரில் தாக்குதல் அல்லது வன்முறையில் தாக்குதல்.

**தண்டனை :** 1 ஒரு மாத கால சாதாரண சிறைவாசம் அல்லது இருநூறு ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 359 (Section 359 )**

kidnapping - ஆளைக் கவர்தல்

1) இந்தியாவிலிருந்து கவர்தல்.

2) சட்டப்பூர்வ பாதுகாவலரிடமிருந்து (Guardian) கவர்தல்.

**பிரிவு 360 (Section 360)**

Kidnapping from India - இந்தியாவிலிருந்து ஆளைக் கவர்தல் :- ஒருவருடைய சம்மதத்தைப் பெறாமல், அல்லது அவருடைய சார்பில் சட்டபூர்வமாக அந்தச் சம்மதத்தைத் தரக்கூடிய நபருடைய சம்மதத்தைப் பெறாமல், அவரை இந்திய எல்லைக்கு வெளியே கொண்டு போவதை இந்தியாவிலிருந்து ஆளைக் கவர்தல் ஆகும்.

**பிரிவு 361 (Section 361)**

kidnapping from lawful guardianship – பெற்றோர், பாதுகாவலரிடமிருந்து கடத்திச் செல்லுதல். பதினாறு வயதிற்குட்பட்ட ஆண் அல்லது பதினெட்டு வயதிற்குட்பட்ட பெண் அல்லது சித்த சுவாதீனமில்லாத நபர் ஒருவரை அவர்களைக் காக்க கடமைப்பட்ட பாதுகாவலரின் சம்மதம் பெறாமல் ஆசைகாட்டி இழுத்துச் செல்லுதல் அல்லது தூக்கிச் செல்லுதல் சட்டப் பூர்வ பாதுகாவலரிடமிருந்து கடத்திச் செல்லுதல் ஆகும்.

''பாதுகாவலர்'' எனும் சொல் அத்தகைய நபரைப் பராமரிக்கும் பொறுப்பில் வைத்துள்ள எவரையும் குறிக்கும்.

**விதிவிலக்குகள் :**

முறைகேடாகப் பிறந்த குழந்தைக்குத் தானே தகப்பன் என்ற நல்ல எண்ணத்துடன் அந்தக் குழந்தையை எடுத்துச் செல்லுதல் இந்தப் பிரிவின் கீழ் குற்றமாகாது.

ஒரு நபரைப் பராமரித்துப் பாதுகாக்கும் பொறுப்பு தனக்கு இருக்கிறது என்ற நல்ல எண்ணத்துடன் அப்படிச் செய்வதும் குற்றமாகாது.

**பிரிவு 362 (Section 362)**

Abduction – கடத்திச் செல்லுதல் :-

வன்முறைகளாலோ அல்லது ஏமாற்றக் கூடிய முறைகளாலோ, ஒருவரை ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும்படி கட்டாயப்படுத்துவது, கடத்திச் செல்லுதல் எனப்படும்.

**பிரிவு 363 (Section 363)**

**குற்றம் :** ஆளைக் கடத்துதல்

**தண்டனை :** 7 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 363 A (Section 363 A)**

**குற்றம் :**பிச்சையெடுக்கும் பொருட்டு வயது வராத ஒருவரை வேலையில் அமர்த்திக் கொள்ள அல்லது பயன்படுத்திக் கொள்ள வேண்டி, ஒருவரைப் பிடித்துச் செல்லுதல் அல்லது தன்வசம் எடுத்துக் கொள்ளுதல்.

**தண்டனை :** 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும். அவ்வாறு பிடித்துச் சென்ற நபரை ஊனப்படுத்தினால் ஆயுள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 364 (Section 364)**

**குற்றம் :** கொலை செய்ய வேண்டி பிடித்துச் செல்லுதல் அல்லது கடத்திச் செல்லுதல்.

**தண்டனை :** ஆயுள் சிறைவாசம் அல்லது 10 ஆண்டுகள் கடுஞ்சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 364 A (Section 364A)**

**குற்றம் :** பணம் பறித்தல், பிறநோக்கங்களுக்காக பிள்ளை பிடித்தல்.

**தண்டனை :** மரணதண்டனை அல்லது ஆயுள் சிறை தண்டனையும், அபராதமும்.

**பிரிவு 365 (Section 365)**

**குற்றம் :** ஒருவரை இரகசியமாகவும், சட்ட விரோதமாக அடைத்து வைக்கும் உட்கருத்துடன் பிடித்துச் செல்லுதல் அல்லது கடத்திச் செல்லுதல்.

**தண்டனை :** 7 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.